# PHOTONTECH




175, Main Street
Trincomalee
075 6602486



அறைவு 02 இயம் 43 June 21 - 27, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்


## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அமைதிகாத்த "சி.எம்"

கிழக்கு மாகாணசபையில் கடந்த 17ம் திகதி மாகாண சபை அமர்வுகளுக்கு முன்னராக நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் தொடர்பாக முன்மொழிவு ஒன்றைச் சமர்ப்பிப்பது தொடர்பாக கட்சித் தலைவர்கள் தவிசாளருடன் காரசாரமாகக் கதைத்த போது கிழக்கின் சி.எம் அமைதி 13

# கிழக்கின் தவிசாளர் பதவி பறிபோகுமா?



## நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கு முஸ்லிம் காங்கிரஸ் முஸ்தீபு

## ஆதரவளிக்குமா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு??

கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க நடவடிக்கைகள் முன்னெக்கப்படுவதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இம் முயற்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளும் கைகூடியுள்ளன என அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பௌத்த கடும்போக்கு அமைப்புக்களால் ஆங்காங்கே சிறு மற்றும் பெரும் எடுப்பில் கடந்த சில காலங்களாக முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவந்த நடவடிக்கைகள் கலவரமாக அண்மையில் பேருவளைப் பிரதேசத்தில் வெடித்தது.

அதனையடுத்து அக் கலவரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க அரசு தாமதித்து விட்டதாகக் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. அதே வேளை இச் செயற்பாட்டை கடுமையாகக் கண்டிக்கும் முகமாக கிழக்கு மாகாண சபையில் அவசர தீர்மானத்தை நிறைவேற்ற முயன்ற முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரின் நடவடிக்கையை சபையின் தவிசாளர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தடைசெய்திருந்தார்........ 13

# செங்கோலுடன் மாகாண சபை உறுப்பினர்கள் ஓட்டம்



அளுத்கம முஸ்லிம்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொது பல சேனா இயக்கத்தையும் அரசாங்கத்தையும் கண்டித்து இன்று கிழக்கு மாகாண சபை அமர்வில் மாகாண சபை உறுப்பினரும் சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீலினால் சமர்ப்பிக்கப்பட்ட அவசர விசேட பிரேரணை அவைத்தலைவரினால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து சபையில் அமளிதுமளி ஏற்பட்டதுடன் மு.கா. உறுப்பினர்களால் செங்கோலும் தூக்கிச் செல்லப்பட்டது. கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு அவைத்தலைவர் ஆரியபதி கலப்பதி தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை முறபகல் 10 மணியளவில் ஆரம்பமானது. இதன்போது அளுத்கம சம்பவத்தை கண்டித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து சபைக்கு சமுகமளித்திருந்தனர்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீல் அளுத்கம முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட காட்டுமிராண்டித்தனமான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொது பல சேனா.... 13

# தாக்குதல் நடாத்தப்படும் என்பதை மு.காவின் உயர் பீடத்திற்கு தமிழ்த் தரப்பு முன்னரே அறிவித்திருந்ததா?

கடந்த மாதம் பிரித்தானியாவிற்கு வருகை தந்திருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவிடம் எச்சரிக்கையுடன் கூடிய ஒரு செய்தி தமிழர் தரப்பினால் வழங்கப்பட்டிருந்தது என சர்வதேசத் தமிழ் இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 25.05.2014 அன்று லண்டனில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்டக் குழுவுக்கும் தமிழர் தரப்பிற்கும் இடையில் நடைபெற்ற ஒரு முக்கிய சந்திப்பின் பொழுது, தமிழர் தரப்பினால் இந்தச் செய்தி முஸ்லிம் காங்கிரசிற்கு வழங்கப்பட்டது எனத் தெரிவித்துள்ள அந்தச் செய்தி தமக்கு...... 13

# உத்தியோகபூர்வ அழைப்பு எவையுமில்லை



## கிழக்கின் எதிர்க் கட்சித் தலைவர்

கிழக்கு மாகாணசபையின் தவிசாளருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவருவது தொடர்பாக உத்தியோகபூர்வ அழைப்புக்கள் எவையும் தமக்குக் கிடைக்கவில்லை என கிழக்கின் எதிர்க்கட்சித் தலைவர் திரு.சி தண்டாயுதபாணி தெரிவித்தார். கடந்த 17ம் திகதி சபை அமர்வுகள்..... 13

# அல்பதா பாடசாலையில் ஆசிரியர்கள் இழிவுபடுத்தப்பட்டனரா?

திருமலை நிலாவெளி அல்பதா பாடசாலையில் ஆசிரியர்களை இழிவுபடுத்தும் நடவடிக்கைகள் தொடர்வதாக மலைமுரசிற்குத் தெரியவந்துள்ளது.

கடந்த மாதம் ஆசிரியர்களுக்கு மாணவன் ஒருவன் புள்ளிவழங்கியதைத் தொடர்ந்து அம்மாணவன் மன நோய்க்கு உட்பட்டிருந்ததாகச் சித்தரித்து அம்மாணவன் மீது நடவடிக்கை எடுக்காமல் தவிர்த்த பாடசாலையில் இவ்வாரம் சில மாணவர்களால் சுவரெங்கும் வேண்டத்தகாத விடயங்கள் எழுதப்பட்டுள்ளது. 13

# அதிபர் நியமனத்தில் மோசடி???

திருகோணமலை மாதுமை அம்பாள் வித்தியாலய அதிபர் நியமனத்தில் நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகள் புறக்கணிக்கப்பட்டிருப்பது நேர்முகப் பரீட்சைப் பெறுபேற்றாவணத்தில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த 21.02.2014ல் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் நிராகரிக்கப்பட்டு குறைந்த புள்ளியைப் பெற்ற ஒருவருக்கே...... 13

# இனியபாரதியின் கன்னிப் பேச்சு கலைந்தது

கிழக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராக பதிவிப்பிரமாணம் செய்துகொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இனியபாரதி தனது கன்னிப் பேச்சை ஆரம்பிக்க முடியாது தடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த 17ம் திகதி கூடிய கிழக்கு மாகாண சபைக்கு புதிய உறுப்பினராக வருகை தந்திருந்த இனியபாரதி என்ற புனைபெயரைக் கொண்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரும் தற்போதைய சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான புஸ்பகுமார்..... 13


AFTER ADVANCED LEVEL....

Join Full time Courses

@

VEAL BUSINESS COLLEGE

No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738

aat SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை


malaimurasu@hotmail.com 075-4252042

## ஒற்றுமையின்றேல் ஆபத்தே!!!

அளுத்கம நகரில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடைபெற்றதைத் தொடர்ந்து கண்டி மற்றும் அனுராதபுரத்திலும் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

தாக்குதல்கள் நடைபெற்ற விதத்தை உற்று நோக்கும் போது அத் தாக்குதல்கள் திட்டமிட்ட வடிவத்தில் நடைபெற்றுள்ளதை உணரலாம். இவ்வகையான தாக்குதலை தமிழர்கள் கடந்த பலவருடங்களாக அனுபவித்துள்ளதை இக்கணத்தில் நினைவுகூரலாம்.

தாக்குதல் நடத்தப்படும் இடத்தில் அமுலாக்கப்படும் ஊரடங்குச் சட்டம் மக்களை வீடுகளுக்குள் தனித்திருக்க வகைசெய்யும். அதனையடுத்து ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ஆயுதங்களுடன் ஒவ்வொரு வீடு களுக்குள்ளும் புகுந்து தமது சங்காரத்தை நிறைவுசெய்வர்.

விசேடமாக- இவ்வகையான பல தாக்குதல்களை கிழக்குத் தமிழர்கள் நன்றாக தெரிந்தும் அனுபவித்தும் - உயிர், உறவு மற்றும் உடமைகளை இழந்தும் இருக்கின்றார்கள். இத்தாக்குதல்களில் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக முஸ்லிம் சகோதரர்களும் களத்தில் இருந்ததை யாரும் மறுப்பதற்கில்லை.

இவ்வகையான திட்டமிட்ட தாக்குதலொன்றே இன்று முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்ந்துள்ளது.

இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்தவர்கள் தனியே முஸ்லிம்கள் அல்ல...! தமிழர்களும் தமிழர் தலைமைகளும் இத்தாக்குதலுக்கு எதிராகத் தமது கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இங்கு கவனிக்கவேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் அரசுடன் இணைந்தியங்கும் முஸ்லிம் தலைமைகள் பிரதேச மட்டங்களில் நடைபெற்ற எதிர்ப்புக்களில் கலந்துகொள்ள பின்னடித்து உள்ளதுடன் அவ்வாறான எதிர்ப்புக்களை முன்னெடுக்கத் தடைகளை விதித்தும் இருந்தமை பதியப்பட்டுள்ளது.

அரசுடன் இணைந்தியங்கும் தலைவர் ஒருவர் பொருத்தமற்ற கூற்றொன்றை இச் சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தியுள்ளார். "முஸ்லிம்களின் பாதுகாப்பை யாரும் உறுதி செய்தால் தான் அரசின் பதவியை விட்டு விலகத் தயார்" என அவர் அறிவித்துள்ளார். அவ்வாறாயின் தர்ஹா நகரில் இன்று அல்லலுற்றுள்ள முஸ்லிம் மக்களுக்கு அவர் அமைச்சுப் பதவியில் இருந்த படியால்தானா பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது??? அவ்வாறு வழங்கப்பட்ட பாதுகாப்பின் பரிமாணம் மூன்று அப்பாவி முஸ்லிம்களின் உயிர்பலியும் கோடிக்கணக்கான சொத்திழப்பும், சோகமுமா?

இக்கணத்தில்தான் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு முஸ்லிம் மக்களே பொறுப்பு என்ற நிதர்சனம் புலனாகின்றது.

இலங்கையின் எண்ணிக்கையிற் குறைந்த இரு தேசிய இனங்கள் எண்ணிக்கையில் அதிகரித்த மற்றொரு தேசிய இனத்தின் மதவாதத்திற்குள் அழியுண்டு போவதில் இருந்து எவ்வாறு தப்பிக்கொள்வது என்பதை இக்கணத்தில் கற்றுக்கொள்ளவேண்டிய தேவை முஸ்லிம்களுக்கே எழுந்துள்ளது. ஏனெனில் மற்றைய தேசிய இனமான தமிழ் இனம் தனது அழிவுகளைத் தடுப்பதற்கான அடிப்படைக் கட்டுமானத்தை தனது சர்வதேசப் புலம் பெயர் அமைப்புக்கள் ஊடாகவும், நிலத்திலுள்ள அரசியல் தலைமைகள் ஊடாகவும் சிறிதளவேனும் செய்துள்ளது. ஆகவே முஸ்லிம் மக்களே தற்போது சிந்திக்க வேண்டிய தேவைக்குள்ளாகியிருக்கின்றார்கள்....

அற்புதமான தருணமொன்றை மீண்டும் உருவாக்கி தமிழர்களும், தமிழ்த் தலைமைகளும் தமது ஆதரவுக் கரத்தை முஸ்லிம் மக்களிற்கு நீட்டியுள்ளனர். இப்பந்தியை எழுதும் போது யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலைக் கண்டித்து தமிழர் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

உலக வரலாறுகளில் ஒற்றுமையூடாக வெற்றியடைந்த வரலாறுகளுக்குச் சற்றும் குறைவில்லாமல் பிரித்தாளும் சூழ்ச்சியாலும் வெற்றியடைந்த வரலாறுகள் நீண்டு கிடக்கின்றன...

தனிப்பட்ட நலன்களைக் களைந்து இன நலனுக்காகவும் சமத்துவ வாழ்விற்காகவும் முஸ்லிம்கள் தீர்மானமொன்றை எடுக்க வேண்டிய மற்றொரு காலம் கனிந்துள்ளது....

## மட்டக்களப்பில் வாவிக்கரைப் பூங்கா அமைச்சர் முரளீதரனால் திறந்து வைக்கப்பட்டது


(உதயகாந்த்)



மட்டக்களப்பு பூம்புகார் பகுதியின் ஆற்றங்கரை ஓரத்தில் பொதுமக்களின் பொழுதுபோக்கிற்காக அமைக்கப்பட்ட ""வாவிக்கரை பூங்காவினை"" மாநகர ஆணையாளர் மா உதயகுமார் தலைமையில் இன்று 16.06.2014 காலை 8.30 மணியளவில் உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.

மீள்குடியேற்ற பிரதியமைச்சர் வி.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நாடாவினை வெட்டி திறந்துவைத்த இந்நிகழ்வில் மீள்குடியேற்ற பிரதியமைச்சரின் பிரத்தியேக செயலாளர் பொன்.ரவீந்திரன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம் .சார்ள்ஸ், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் காமினி, மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் பூ.குணரெட்னம், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.தவராசா, மட்டக்களப்பு காவல் நிலைய தலைமையாக காவல் பரிசோதகர் எட்டியாராட்சி , மாநகர பிரதி ஆணையாளர் என்.தனஞ்செயன், மாநகர பொறியியலாளர் அச்சுதன் ஆகியோரும் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ் வின் 23வது தியாகிகள் தினம் திருமலையில்



திருகோணமலை மாவட்டத்தில் 24வது தியாகிகள் தினத்தை திருஞானசம்பந்தர் வீதியில் அமைந்துள்ள கற்பகப் பிள்ளையார் கோயில் வாசிகசாலையில் நினைவுகூரப்பட்டுள்ளது. பத்மநாபா E.P.R.L.F தோழர்களும் பொது மக்களும் இந் நிகழ்வில் அஞ்சலி செலுத்தினார்கள்.

அதனை தொடர்ந்து தோழர் பத்மனாபாவின் நினைவாக இலவச கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. பொது மக்கள் பயன் பெறுமாறு இலவசமாக உடனுக்குடன் மூக்கு கண்ணாடியும் வழங்கப்பட்டது. இவ் மருத்துவ முகாமில் பெரும் அளவிலான பொது மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந் நிகழ்வு அனைத்தும் கட்சி ஒருங்கிணைப்பாளர் சத்தியன் தலைமையில் பத்மநாபா E.P.R.L.F தோழர்களாலும் நியூட்டன் தலைமையிலான மருத்துவ குழுவினராலும் கோவில் நிர்வாகத்தின் உதவிகளாலும் இவ் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.




## திருமலைக் கடற்பரப்பில் இந்திய மீனவர் கைது

திருகோணமலை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஏழு இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

திருகோணமலை கடற்படை முகாம் உத்தியோகத்தர்கள் குறித்த இந்திய மீனவர்களை கைது செய்துள்ளனர்.

மீனவர்களின் படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த மீனவர்களை திருகோணமலை துறைமுக காவல்துறை ஒப்படைத்ததாகவும், இன்று இவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புல்மோட்டையில் கதவடைப்பு

அளுத்கம தர்கா நகர் முஸ்லிம்கள் மீது பொது பல சேனா அமைப்பினால் நடாத்தப்பட்ட காடைத்தனமான வன்முறைகளை கண்டித்து நாடளாவிய ரீதியில் அமைதியான முறையில் முஸ்லிம்களால் கர்த்தாள் அனுஷ்டிக்கப்படுகிறது. அதன் ஒரு அங்கமாக புல்மோட்டைப் பிரதேச மக்களும் தமது கவலை உணர்வுகளை வெளிப்படுத்த தவறவில்லை என புல்மோட்டை வர்த்தகர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

புல்மோட்டை வர்த்தகர் சங்கத்தினர் ஏற்பாட்டில் சகல கடைகளும் அடைக்கப்பட்டு கடந்த 19ம் திகதி துக்கதினம் அனுட்டிக்கப்பட்டுள்ளது.

இத்துக்க தின அனுட்டிப்புக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் குச்சவெளி பிரதேச உப தவிசாளர் புல்மோட்டை ஜம்மியத்துல் உலமா சபை மற்றும் அனைத்து பள்ளிவாயல்கள் ஒன்றியம் மற்றும் அனைத்து அமைப்புக்களும் தமது ஆதரவை நல்கியிருந்தன.

## கடற்படைத்தளபதி திருகோணமலையில்

இலங்கைக் கடற்படைத் தளபதி கடந்த 18 மற்றும் 19ம் திகதிகளில் திருகோணமலைக்குப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.



இப்பயணத்தின் போது எந்திரவியல் கற்கைக்கான நான்கு மாடிக் கட்டடமொன்றை அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே திறந்து வைத்தார். அத்துடன் அபான்ஸ் விற்பனைக் காட்சியறையொன்றையும் கடற்படைத் தளத்தினுள் அவர் திறந்து வைத்துள்ளார்.

## பாரதிபுரம் கிராமத்தில் சர்வதேச விதவைகள் தினம்

பாரதிபுரம், கிளிவெட்டியில் இயங்கிவரும் பாரதி விதவைகள் சங்கம் உலக விதவைகள் தினத்தை எதிர்வரும் ஜூன் 23ல் நினைவுகூறும் ஏற்பாட்டை முன்னெடுத்துள்ளது.

பாரதி விதவைகள் சங்கத் தலைவர் அ. சந்திரமலர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மூதூர் பிரதேசச் செயலாளர் திரு என்.பிரதீபன் மற்றும் மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ.இ.பாஸ்கரன் குருக்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அனைவரையும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்விற்கு வருகை தரும்படி பாரதி விதவைகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

## மூதூர் இந்துக் குருமார் சங்கத்தின் உதவிகள்

மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ.இ.பாஸ்கரன் குருக்கள் அவர்களின் ஏற்பாட்டில் இந்துக் குருமார் சங்கத்தினரால் அறநெறிப்பாடசாலை வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கங்குவேலிக் கிராமத்தின் அறநெறிப்பாடசாலைக் குழந்தைகளுக்கே இவ்வுதவி கிடைக்கப்பெற்றுள்ளது.



## கடலில் மூழ்கியவர் சடலமாய் மீட்பு

கல்முனை கடலில் மூழ்கிய இளைஞன் ஒருவரின் சடலம் இன்று சாய்ந்தமருது கடல் பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

பாண்டிருப்பை சேர்ந்த லோகநாதன் ஜெனிலோசன் (20 வயது) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.ஜெனிலோசன் தனது மூத்த சகோதரர் மற்றும் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவருடனும் இணைந்து [illegible] கடற்கரை பகுதியில் குளித்துக் கொண்டிருந்த போது காணாமல்போயுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் ஆசியாவிலிருந்து இலங்கைக்கு இலங்கையிலிருந்து உலகிற்கு !!!

## வாராந்த அலசல்

செய்திகள் பார்வைகள் எண்ணங்கள்

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இலங்கையின் வரலாற்றில் 261 கிலோ நிறையுடைய 2075 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றப்பட்ட



போதுதான் சர்வதேசப் போதைப் பொருட் கடத்தலின் நடுநிலையமாக இலங்கை மாறிவருகின்றதா என்னும் கேள்வி எழுந்தது.

அதை மேலும் உறுதி செய்யத்தக்கதாக தற்போது 85.5 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. இலங்கையின் தரவுகளின்படி கடந்த 10 ஆண்டுகளில் ஹெரோயின் நுகர்வு குறைந்துள்ள நிலையில் இலங்கையில் இவ்வளவு நிறை கொண்ட ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதால் இங்கிருந்து வேறு நாடுகளுக்கு அவை கடத்தப்படுவதற்காகவே கொண்டுவரப்படுகின்றன என்பது உறுதியாகியுள்ளது.

நடவடிக்கை

கடந்த மூன்று மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின் பெறுபேறாகவே களனிப் பகுதியில் இந்த 85.5 கிலோ ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. இவை மிகச் சுத்தமான ஹெரோயினாக இருப்பதுடன் 01:10 என்ற விகிதத்தில் மேலதிகக் கலப்புக்களைச் செய்தே இதனை நுகர முடியும் எனத் தெரிகின்றது.

இந்த நடவடிக்கைக்கான தகவல்கள் மூன்று மாதங்களுக்கு முன்னரே கிடைக்கப் பெற்றுள்ளது. அதைத் தொடர்ந்து விறன் மிக்கக் குறும்படையொன்று விசேட அதிரடிப்படையில் உருவாக்கப்பட்டது.

அடிப்டைத் தகவல்களைக் கொண்டு இந்தக் குழுவை பின் தொடர்வது சாத்தியமானதாக இருக்கவில்லை. எனினும் அந்த விறன் மிக்க படைப்பிரிவு தகவல் திரட்டும் பணியில் தொடர்ந்து கொண்டே இருந்தது. அந்த முயற்சியும் பல தடவைகள் முட்டுக்கட்டையை எதிர்கொண்டது. அரச மற்றும் சட்டத்துறை நிறுவனங்களில் இருந்து கூட தகவல்களை திரட்டுவது கடினமாக இருந்துள்ளது.

எனினும் அண்மையில் கிடைத்த தகவலின்படி பெருமளவு ஹெரோயின் கடல் மார்க்கமாக இலங்கைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை அவர்கள் தெரிந்து கொண்டதும் உசாரானார்கள்.

தொடர்ந்து அவதானிப்புக்களை அதிகரித்த போது ஹெரோயின் ஓரிடத்தில் இருந்து மற்றோரிடத்திற்கு பாதுகாப்புக் கருதி மாற்றப்படுவது தெரியவந்தது.

அத்துடன் தெரிய வந்த மற்றொரு விடயமே இக்கைப்பற்றுதலுக்கு அடிப்படையாக அமைந்தது. அத் தகவல் மகிழுந்து ஒன்றின் பதிவிலக்கம் ( Car Number Plate WP-KS-0358)

உடனடியாகவே பியகம நெடுஞ்சாலையில் களனி ரஜ மஹா விகாரையிலிருந்து பண்டாரவத்த சந்நிதிவரை நாற்பது விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்கள் சாதாரண உடையில் பணிக்கமர்ந்தனர். அவர்களிடமிருந்து அன்றைய நாளின் மாலையில் வந்த செய்திகளின் படி அந்த மகிழுந்து பியகம நெடுஞ்சாலையில் ஹொண்டா மகிழுந்துக் கம்பனிக்கு அருகிலுள்ள பூட்சிட்டியின் மகிழுந்துத் தரிப்பிடத்தில் இருப்பதை அறிவித்தனர். அதனை அண்மித்துப் பார்த்தபோது அம்மகிழுந்து வெறுமையாக இருந்தது.

விசேட அதிரடிப்படையினருக்கு மேலும் கண்காணிப்பதுடன் காத்திருக்குமாறு கட்டளையிடப்பட்டது. தொடர்ந்து அடுத்த சில மணித்தியாலங்களில் 201 - 9637 என்ற இலக்க முச்சக்கர வண்டியில் வந்த மூவருள் இருவர் அம் மகிழுந்தைக் கிளப்பி அம்முச்சக்கர வண்டி தொடர களனி ரஜ மஹாவிகாரை நோக்கி பணிப்பதாக கண்காணிப்பாளரிடமிருந்து தகவல் பறந்தது.

விஹாரைக்கு அருகில் சந்தியில் உள்ள காவல் பரிசோதனை நிலையத்தில் அவ்விரு வாகனங்களும் தனிமையாக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

அம்மகிழுந்தை ஓட்டியவரும் முச்சக்கர வண்டியை ஓட்டியவரும் ஆகிய இருவரும் தமிழ்ச் சகோதரர்களான சுந்தரராஜா மற்றும் ரவிக்குமார் ஆகியோராவர்.

அதையடுத்து மகிழுந்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. அவை 3 கிலோ நிறையுடைய 25 பொதிகளும் 01 கிலோ நிறையுடைய 10 பொதிகளும், அரை கிலோ நிறையுடைய ஒரு பொதியுமாக 680 மில்லியன் சரக்காக இருந்தது.

விசாரணைகளில் இவர்கள் வெறும் காவிகள் என்று மட்டுமே தெரிய வந்துள்ளது. குறித்த மகிழுந்தும் ஓரிடத்தில் இருந்து வாடகைக்கு பெறப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் இயங்கும் "சித்தீக் துவான்" என்பவனே வெளிநாட்டுக் கடத்தல் முகவராக இந்த ஹெரோயின் பொதிகளுக்குச் செயற்பட்டுள்ளான்.

கைது செய்யப்பட்டவர்கள் காவிகள் எனில் உண்மைக் கடத்தல்கார்கள்...?

ஒவ்வொரு மாதமும் முப்பது கிலோகிராம் நிறை கொண்ட ஹெரோயின் அதிமுக்கியமானவர்கள் இலங்கைக்குள் வரும் விமான வழியின் ஊடாகக் கொண்டு வரப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது... யாரைக் கைது செய்வார்கள்?

# அமெரிக்கக் கடத்தலில் "அபு கத்தாலா"


பின் லேடனை பாக்கிஸ்தானுக்குள் புகுந்து, சுட்டுக்கொன்ற அமெரிக்க ஆப்பரேசனுக்கு பின்னர், நடந்த பாரிய வெளிநாட்டு கடத்தல் இதுவாகத்தான் இருக்க முடியும்.

ஆம் லிபிய நாட்டில் உள்ள பென்காசியில் அமெரிக்க தூதரகத்தை எரித்து நாசம் செய்து, அங்கே வேலை பார்த்த நபர்கள் பலரைக் கொன்ற "அபு கத்தாலாவை" அமெரிக்கா சில தினங்களுக்கு முன்னர் லிபியாவுக்குள் புகுந்து தூக்கியுள்ளார்கள்.


லிபிய அரசுக்கு தெரியாமல் சுமார் 12 விசேட டெல்டா படையினர் (ELITE DELTA FORCE) 3 காரில் பென்காசி நகரில் புகுந்து அபு கத்தாலாவை தூக்கியிருக்கிறார்கள். அதுவும் 60 நொடியில். மேலும் ஒரு துப்பாக்கி தோட்டாவைக் கூட அவர்கள் பாவிக்கவில்லை. உயிர்சேதம் எதுவும் இல்லை. இதேவேளை லிபிய அரசிற்கு தெரியாமல் 2 அமெரிக்க ஆளில்லா வேவு விமானங்கள் வேறு இந்த கடத்தலுக்கு துணைபோய் உள்ளது என்ற அதிர்சி தகவலையும் வாஷிங்டன் போஸ்ட் வெளியிட்டுள்ளது. அப்படி என்றால் லிபியாவின் ராடர் அவதானிப்பு நிலையம் என்ன செய்தது ?

இந்த கடத்தல் எவ்வாறு நடந்தது ? வாருங்கள் சுவாரசியமான விடையத்திற்கு போகலாம் !

அமெரிக்க தூதரகத்தை எரித்து, எரிந்துகொண்டு இருக்கும் தூதரகம் முன்னால் கம்பீரமாக போஸ் கொடுத்த ஆள் தான் இந்த அபு கத்தாலா. இவர் சில வருடங்களாக லிபியாவில் தான் வாழ்ந்து வருகிறார். அமெரிக்கா இவரை நாடு கடத்தும் படி பல முறை கேட்டது. ஆனால் அது நடக்கவில்லை. தமது நாட்டு சட்டதிட்டங்களுக்கு அமைவாக அவர் மீது வழக்கு போடுவோம் என்று லிபியா அறிவித்தது. ஆனால் அது நடந்த பாடாக இல்லை. அபு கத்தாலா மிகவும் சுதந்திரமாக பென்காசி நகரில் வசித்து வந்தார். பலத்த பாதுகாப்பும் அவருக்கு இருந்தது. அமெரிக்காவை மிரட்டும் ஒரு நபராகவும், தனது சொந்த இடத்தில் செல்வாக்கு மிக்கவராகவும் அவர் இருந்தார். அவரை பென்காசியில் இருந்து



தூக்கவேண்டும் என்று அமெரிக்க சி.ஐ.ஏ நிறுவனம் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் முடிவெடுத்துவிட்டது.



ஆனால் ஏன் இவ்வளவு காலம் எடுத்தது என்று நினைப்பீர்கள். பென்காசியில் அவர் தங்கும் இடத்தை அடிக்கடி ஆளில்லா விமானம் மூலம் நோட்டமிட்ட அமெரிக்கா அவர் தங்கும் இடத்தை

## தாக்குதல் - பின்லேடன் 2

அப்படியே படம் எடுத்து அதுபோன்ற ஒரு மாதிரி கிராமத்தையே உருவாக்கி இருக்கிறது. அட்டை (பேப்பர்களை) கொண்டு சினிமா படத்தில் "செட்" போடுவது போல அமைத்துள்ளார்கள். அவரின் இருப்பிடம் எவ்வாறு இருக்கும், அதற்கு எத்தனை வாசல் அங்கே எத்தனை காவலாளிகள் இருப்பார்கள் என்பது எல்லாம் அமெரிக்கா வேவு விமானம் மூலம் அறிந்து வைத்துள்ளது. டெல்ட்டா அணியில் உள்ள 12 பேரும், பல மாதங்களாக அபு கத்தாலாவை எப்படி கடத்துவது என்று அங்கே ஒத்திகை பார்த்து இருக்கிறார்கள். அபு கத்தாலா போல ஒருவர் அங்கே இருப்பார். (அமெரிக்க செட்டப்பில்) அவரை எப்படி பிடிப்பது ? காவலாளிகளை எப்படி சமாளிப்பது என்று மாதக் கணக்கில் பயிற்சி எடுத்துள்ளார்கள்.

இறுதியாக அவர்கள் அனைவரும் லிபியா சென்று, அங்கே 3 வாகனங்களை எடுத்து பென்காசியில் உள்ள அபு கத்தாலா வீட்டுக்குச் சென்று சுமார் 60 நொடிகளில் அவரை கைதுசெய்து அங்கிருந்து கொண்டு சென்றுவிட்டார்கள்.

அங்கே நின்ற காவலாளிகள் எவரும் சுடவும் இல்லை, சுடக் கூடிய சந்தர்ப்பத்தை டெல்டா படையினர் ஏற்படுத்தவும் இல்லை. குறிப்பாக அனைத்து காவலாளிகளையும் ஒவ்வொருவராகப் பிடித்து மயக்கமடைய வைத்துள்ளார்கள். அங்கிருந்து அபு கத்தாலாவை கொண்டு சென்று, அமெரிக்க கடற்படை கப்பலான (USS New York) க்கு கொண்டு சென்றுவிட்டார்கள். இக் கப்பலில் ஒரு சிறப்பு அம்சம் உள்ளதாம். அதாவது அமெரிக்காவில் உள்ள இரட்டைக் கோபுரத்தை பின் லேடன் தகர்த்தவேளை அவை இரண்டும் விழுந்து மண்ணோடு மண் ஆனது. ஆனால் அதில் உள்ள இரும்புகளை எடுத்து அமெரிக்கா , இந்த போர் கப்பலை செய்துள்ளதாம்.

அந்தக் கப்பலுக்கே அபு கத்தாலாவை தற்போது கொண்டுசென்றுள்ளார்கள். இங்கிருந்து அவர் அவரை அமெரிக்கா கொண்டுசெல்ல இருக்கிறார்கள். ஆனால் இச்செயலானது லிபியாவை ஆத்திரமூட்டியுள்ளது.



சம்பவ தினத்தன்று கூட இரண்டு அமெரிக்க உளவு விமானங்கள் பென்காசி நகரின் மேல் இருந்துள்ளது.

முழு ஆப்பரேஷனும் முடியும் வரை தரையில் உள்ளவர்களுக்கு வான் பாதுகாப்பு மற்றும் வானில் இருந்து வேவு தகவல் அனைத்தும் கிடைத்துள்ளது. ஒரு நாட்டிற்குள் புகுந்து, அன் நாட்டு இராணுவத்திற்கே தெரியாமல் இப்படி ஒரு காரியத்தை செய்வது என்பது மிகவும் பாரதூரமான விடயம்.

ஆனால் அமெரிக்கா இதனை நியாயப்படுத்தியுள்ளது. இருப்பினும் அபு கத்தாலாவை தம்மிடம் ஒப்படைக்கவேண்டும் என்று லிபிய தற்போது கோரியுள்ளதோடு அமெரிக்காவின் இச்செயலை வன்மையாக கண்டித்துள்ளது.

ஆனால் இந்த விடயம் தொடங்கி நடந்து முடியும் வரை எதனையும் லிபிய அரசு அறிந்திருக்கவே இல்லையாம். காலையில் செய்தியைப் பார்த்து தான் , தமது நாட்டு மண்ணில் இப்படி ஒரு கடத்தல் சம்பவம் நடைபெற்றுள்ளது என்று அந் நாட்டுத் தலைவர்கள் அறிந்துள்ளார்கள். (நன்றி - இணையம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளுத்கமை வன்முறையினால் உருவாகக்கூடிய நிலை??

இலங்கைத் தீவின் வரலாற்றில் மிக முக்கியமானதொரு காலகட்டத்தில் அளுத்கமை வன்முறைகள் அரங்கேறியுள்ளன. அளுத்கமையில் தொடங்கி தர்கா நகர், பேருவளை, தெஹிவளை, பதுளை என்று பல்வேறு இடங்களுக்கும் பரவிய இந்த வன்முறைகள் உலகின் கவனத்தை இலங்கையின் பக்கம் திரும்ப வைத்துவிட்டது.

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் ஒரு விசாரணைக்குழுவை நியமித்துள்ளது. குறித்த தகவல் கூட இந்தளவுக்கு உலகளாவிய கவனத்தை ஈர்த்திருக்கவில்லை.

கடந்த வாரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 26ஆவது அமர்வில் தொடக்க உரை நிகழ்த்திய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இந்த விசாரணைக்குழு பற்றிய அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

அதற்குப் பின்னர் இவ்வன்முறைகள் நிகழ்ந்திருப்பது இலங்கைக்கு பெரும் தலைக்குனிவை ஏற்படுத்தியுள்ளது. இவ்வன்முறைகளின் அடிப்படையாக கூறப்படும் சம்பவங்கள் எல்லாமே திட்டமிடப்பட்டவையென்று கூறமுடியாது.

அதேவேளை, ஏதேச்சையாக நடந்த சில சம்பவங்களைக் கொண்டு இதனையொரு பெரும் வன்முறையாக மாற்றப்பட்டதை எதிர்பாராத நிகழ்வெனவும் கருதமுடியாது.

கடும் போக்குவாத பொது பல சேனா நடத்திய கூட்டத்தின்போது, ஞானசார தேரர் நிகழ்த்திய உரையும் அதற்குப் பின்னர் இடம்பெற்ற வன்முறைகளும் நாட்டில் மத ரீதியான பதற்றநிலையொன்று உள்ளதென்பதை உலகிற்கு வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது.

சர்வதேச அரங்கில் இலங்கை அண்மைக்காலமாக இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகி அவப்பெயரைச் சந்தித்துவருகின்றது. எனினும், இலங்கை அரசாங்கம் ஒருபோதும் அதனை ஏற்றுக்கொண்டதில்லை. நாட்டில் இன, மத நல்லிணக்கச் சூழல் நிலவுவதாக அரசாங்கம் எப்போதுமே வாதிட்டு வந்துள்ளது.

எல்லா இன, மத மக்களும் பாதுகாப்புடனும் நிம்மதியாகவும் சகோதரத்துவத்துடனும் வாழ்வதாக அரசாங்கம் வெளியுலகிற்கு காண்பிக்க முற்பட்ட விம்பத்தை ஒரே நொடியில் நொறுக்கிப்போட்டு விட்டது அளுத்கமை வன்முறைகள்.

அளுத்கமை வன்முறைகளுக்கு காரணம் தாமல்ல, மறுதரப்பே என்று இருதரப்பும் வாதிடுகின்றன. யார் இந்த வன்முறைகளுக்கு காரணமென்று ஆராய்வது இப்பத்தியின் நோக்கமல்ல.



இதுபோன்ற வன்முறைகளின் அடிப்படை, இதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படாமை, இதன் விளைவுகள் என்பனவே இப்பத்தியின் ஆய்வுப் பரப்பாகும்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர், தீவிரம் பெற்றுவரும் பௌத்த கடும் போக்குவாதம் நாட்டை ஆபத்தான திசையில் கொண்டு செல்லத் தொடங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பெறப்பட்ட வெற்றியின் மிதப்பே ஏனைய மதங்கள், இனங்களை அடக்கியாளும் பௌத்த கடும்போக்குவாதம் தீவிரம் பெறக் காரணம்.

தமிழருக்கு எதிராக கடைப்பிடிக்கப்பட்ட இந்த கடும்போக்குவாதம், போர் முடிவுக்கு வந்த பின்னர் மெதுவாக ஏனைய மதங்களை நோக்கித் திரும்பத் தொடங்கியது.

குறிப்பாக கத்தோலிக்க, பெந்தெகொஸ்தே மற்றும் இஸ்லாமிய மதங்கள் மீதான வெறுப்பை தூண்டத் தொடங்கியது இந்த பௌத்த அடிப்படைவாதம்.

திடீரென இத்தகைய போராட்டங்களினூடாக பொது பல சேனா, இராவண பலய உள்ளிட்ட அமைப்புகள் பலம்பெற்றதுடன், இந்த கடும்போக்குவாதம் மத தீவிரவாதமாக மாறியது.

தம்மை மத அடிப்படைவாதிகள் என்றும் இனவாதிகள் என்றும் அழைப்பதாகவும் அது சரியே என்றும் கொழும்பில் செய்தியாளர்களிடம் கடந்த திங்களன்று பெருமையாக குறிப்பிட்டிருந்தார் பொது பல சேனாவின் பொதுச்செயலரான ஞானசார தேரர்.

சிங்கள பௌத்த மக்களின் காவலர்களாக தம்மை காட்டிக்கொள்வதில், அவர்களுக்காக போராடும் தீவிரவாதிகளாக காட்டிக்கொள்வதில் பொது பல சேனா போன்ற அமைப்புகள் பெருமைப்படுகின்றன. இங்கிருந்துதான் மத ரீதியான பதற்றநிலை உருவாகத் தொடங்கியது.

கிறிஸ்தவர்களின் மதப் பரப்புகைக்கு எதிரான போராட்டங்களை தீவிரப்படுத்தியிருந்த பொது பல சேனா, அது மேற்குலகில் கடும் எதிர்ப்பை உருவாக்குவதை உணர்ந்துகொண்டு மெதுவாக இஸ்லாமியர்கள் பக்கம் திரும்பியது.

ஹலாலுக்கு எதிரான போராட்டங்கள் ஆங்காங்கே. பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களென்று நடந்துவந்த வன்முறைகளின் தொடர்ச்சியாகவே அளுத்கமை, பேருவளை வன்முறைகளை குறிப்பிடலாம்.

இவை அளுத்கமையில் பௌத்த பிக்கு ஒருவரின் வாகனம் தாக்கப்பட்ட சம்பவத்தின் விளைவாக இடம்பெற்ற வன்முறைகளல்ல.

இதற்கான அடிக்கல் ஏற்கெனவே பொது பல சேனாவின் கோட்பாடுகளிலேயே நாட்டப்பட்டு விட்டது. அதனால் தான் சிறு சம்பவங்கள் கூட ஊதி பெரிதாக்கப்பட்டு வன்முறைகளாக வெடித்தன.

அளுத்கமை வன்முறைகளின் பின்னர் அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில், அளுத்கமை வன்முறைகள் குறித்து ஊடகங்கள் பொறுப்பற்று செய்திகளை வெளியிடுவதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அதில் அளுத்கமை வன்முறைகளை சிறு சம்பவங்களென்றும் அதை ஊடகங்களே பெரிதாக காட்டியுள்ளதாகவும் கூறப்பட்டிருந்தது.

நான்கு பேர் கொல்லப்பட்டு ஏராளமானோர் காயமடைந்து பெருமளவு வீடுகள், கடைகள், வாகனங்கள் அழிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேறிய பெரும் அனர்த்தத்தை சிறு சம்பவமென்று கூறி அடக்க முயன்றது அரசாங்கம்.

இது போன்ற ஊக்கங்கள் தான் பொது பல சேனா போன்ற கடும்போக்குவாத அமைப்புகள் இந்தளவுக்கு பலம் பெறக் காரணமாகியுள்ளன.

இத்தகைய அமைப்புகள் அரசாங்கத்தின் நிழலிலிருந்தோ, அதன் சிறகிலிருந்தோ இலகுவாக வலுப்பெறமுடிகிறது.

அளுத்கமையில் பௌத்த பிக்குவின் வாகனம் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு உரிய பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் செய்யப்பட்டு, இன அல்லது மத ரீதியான பதற்றம் தீவிரம் பெறாமல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தால், இவ்வன்முறைகள் ஏற்பட்டிருக்காது.

ஆனால் அரசாங்கமோ, சட்டம் ஒழுங்கை பேணவேண்டிய பாதுகாப்புத் தரப்பினரோ அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கவில்லை என்பதையே இந்த வன்முறைகளின் கோரம் எடுத்துக்காட்டியுள்ளது.

இந்த வன்முறைகளின் காயத்திலிருந்து இரத்தம் வடிவது நின்றுபோக முன்னரே, முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாவனெல்லையில் மற்றொரு கூட்டத்தை ஒழுங்குசெய்து மீண்டுமொரு வன்முறைக்கு தூபம் போடத் தயாராகியிருந்தது பொது பல சேனா.

நீதிமன்றத் தடை உத்தரவால் இன்னொரு அனர்த்தம் தடுக்கப்பட்டது.

அதுபோன்று அளுத்கமையிலும் முன்னெச்சரிக்கையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், எல்லாவற்றையுமே தவிர்த்திருக்கலாம்.

எல்லா வன்முறைகளுக்கும் பொது பல சேனாவே பொறுப்பெனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. ஆனால், அந்த பொது பல சேனா பலம் பெறவும் அதன் நடவடிக்கைகள் தீவிரம் பெறவும் இடமளித்தது அரசாங்கமே.

அரசாங்கம் பொறுப்புடன் உரிய பாதுகாப்பு நடைமுறைகளை கையாண்டிருந்தால், இவ்வன்முறைகளுக்கு இடம் ஏற்பட்டிருக்காது. இந்த வன்முறைகளின் விளைவாக நாட்டின் மத ரீதியான பதற்றநிலை பரவலாக உருவாகியுள்ளது.

நாடெங்கும் முஸ்லிம்களும் சிங்களவர்களும் கலந்து வாழ்கின்றதொரு சூழலில், இந்த வன்முறைகளால் எல்லாப் பகுதிகளிலும் வாழும் முஸ்லிம்களும் பாதுகாப்பற்றதொரு நிலையை உணரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பொது பல சேனா போன்ற அமைப்புகளினது கடும்போக்குவாதத்தையும் தாண்டி, இனங்களுக்கு இடையிலான விரிசல் அதிகரிக்கும் நிலை தோன்றியுள்ளது. இரு சமூகங்களுக்குமிடையில் நம்பிக்கையின்மையும் குரோதங்களும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளினது அறிக்கைகளில் இந்த மத ரீதியான பாகுபாடு, மதச் சுதந்திரம் தடுக்கப்படல் உள்ளிட்ட விவகாரங்களில் இலங்கை மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வந்தன.

அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூட, மதங்களுக்கிடையிலான பதற்றநிலை மற்றும் உரிமை மறுப்புக் குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இது பற்றிய சில அறிக்கைகள் இஸ்லாமிய நாடுகளின் கைக்கும் சென்றதால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை, இஸ்லாமிய நாடுகளின் ஆதரவு கேள்விக் குறியானதையும் மறுக்கமுடியாது. அதையெல்லாம் அரசாங்கம் நிராகரித்த நிலையில், இவ்வன்முறைகளின் அரங்கேற்றம் நிகழ்ந்துள்ளது.

இதனையொரு சிறு சம்பவமாக காட்ட அரசாங்கம் முயற்சித்தாலும், இச்சம்பவங்கள் உலகளாவிய கவனத்தை பெற்றுவிட்டது.

உள்ளூர் ஊடகங்கள் மீது நெருக்குதல் கொடுத்து இச்சம்பவங்களின் உண்மையான பரிமாணத்தை வெளிப்படுத்தாமல் தடுத்துவிட்டதாக அரசாங்கம் நம்பியதால் தான், இதனையொரு சிறிய சம்பவமென்று குறிப்பிடத்துணிந்தது.

ஆனால், பல்கிப் பெருகிவிட்ட சமூக ஊடகங்களும் சர்வதேச ஊடகங்களும் வன்முறைகளால் நிகழ்த்தப்பட்ட அநியாயங்களையும் அத்துமீறல்களையும் உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன.

சர்வதேச ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் வெளியான படங்கள், இவ்வன்முறைகளின் கோரத்தை மிகத்துல்லியமாக வெளிப்படுத்திவிட்டன.

ஆனாலும், இதனையொரு சிறு சம்பவமாக காட்ட அரசாங்கம் முயற்சித்தமையை சிறுபிள்ளைத்தனமானது என்பதா, கோமாளித்தனமானது என்பதா அல்லது வேறேதும் வகையில் கூறுவதா என்று தெரியவில்லை.

மூடப்பட்ட போர் அரங்கில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அநீதிகள் மறைக்கப்பட்டது போல, இவற்றையும் மறைத்துவிடலாமென்று அரசாங்கம் நம்பியது போலும்.

தம்முடனிருக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகளைக் கொண்டு எல்லாவற்றையும் சமாளித்துவிடலாமென்று அரசாங்கம் கணக்கு போட்டிருக்கலாம்.

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அநீதிகளுக்கான சாட்சியங்களே வெளிவந்த சூழலில், அளுத்கமையிலிருந்து அவை வெளிவராதென்று அரசாங்கம் நம்பியிருந்தால், அதுபோல முட்டாள்தனம் வேறேதும் இருக்காது.

இதன் விளைவாக உலகின் அனைத்துப் பக்கங்களிலிருந்தும் அரசாங்கம் கண்டனங்களையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டிருக்கிறது.

அமெரிக்கா, கனடா, போன்ற நாடுகள் வன்முறைகளை கட்டுப்படுத்தி, அதற்கு பொறுப்பானவர்களை தண்டித்து, அனைத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இந்த வன்முறைகள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவும் ஆபத்தைச் சுட்டிக்காட்டி உரிய பாதுகாப்பு அளிக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கூறியிருந்தார்.

ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனும் இந்த வன்முறைகளுக்காக ஆழ்ந்த கவலை வெளியிட்டார்.

சர்வதேச ஊடகங்கள் இந்த வன்முறைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததும் ஆசிரியர் தலையங்கங்களை எழுதியதும் குறிப்பிட்டுக் கூறத்தக்க விடயங்கள்.

இதன் மூலம், உலகம் முழுவதும் இலங்கை பற்றியதொரு எதிர்மறையான விம்பம் உருவாக்கப்பட்டுள்ளது. அதுவும், மியான்மாரில் விராது பிக்குவின் தலைமையில் பௌத்த பிக்குகளால் நடத்தப்படுகின்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுடன் ஒப்பிட்டே, இலங்கை பற்றிய வன்முறைகள் பற்றிய செய்திகள் வெளியிடப்பட்டன.

இவையெல்லாம் இலங்கையை மத ரீதியாக பதற்றம் நிறைந்த நாடாக உலகின் முன் நிற்கவைத்துள்ளன.

அளுத்கமை வன்முறைகள் இடம்பெற்ற அடுத்த நாளே, அவுஸ்திரேலியா தமது குடிமக்களுக்கான பயண எச்சரிக்கையை புதுப்பித்தது. இவற்றோடு மட்டும் இதன் விளைவுகள் நின்றுபோகப் போவதில்லை.



சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிராக புதிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி, தற்போது நடக்கப்போகின்ற ஐ.நா. விசாரணைகளின் அவசியத்தையும் எடுத்துக் காட்டியுள்ளது. இவையெல்லாம் இலங்கைக்கு நெருக்கடிகளாக உருவெடுக்கும்.

இந்த நிலையிலும் கூட, முஸ்லிம் அரசியல் தலைமைகள் மிகுந்த பொறுமை காப்பது ஆச்சரியமானதே.

முஸ்லிம்களை காப்பாற்ற முடியாத அரசாங்கத்தில் அமைச்சராக இருப்பதற்கே வெட்கப்படுவதாகவும் பதவியை துறக்கவும் தயங்கேன் என்றும் அளுத்கமையில் கூறிய அமைச்சர் ரவூப் ஹக்கீம், கொழும்பு வந்து சேர்ந்ததும் அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்தமாட்டேன் என்று கூறியிருந்தார்.

இந்தளவுக்கு பொறுமை காக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகள், இதன் மூலம் தாம் சார்ந்த மக்களுக்காக எதைச் செய்யப்போகின்றன என்று தெரியவில்லை.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியவில்லையே என்று கண்ணீர் விட்ட முஸ்லிம் அரசியல் தலைமைகள், தொடர்ந்தும் முஸ்லிம்களின் நலனுக்காகவே அரசில் நீடிப்பதாக காரணம் கூறுவது வேடிக்கை.

அரசிலிருந்து விலகிச்சென்றால் இன்னும் ஆபத்து நேரிடும் என்று கூறியிருப்பதை வைத்துப் பார்த்தால், முஸ்லிம் அரசியல் தலைமைகள் அரசாங்கத்தால் பணயம் வைக்கப்பட்டிருக்கிறார்களோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

**நன்றி - தமிழ் மிரர் (கே.சஞ்சயன்)**

www.tamil.dailymirror.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடியைக் கொடுத்து அடி வேண்டுதல்

... நாட்டு நடப்பு...

மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற சில பிரச்சினைகள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வராவிடின் முறையான நீதி கோரி அவர்கள் செல்ல வேண்டிய இடம் நீதிமன்றமே. ஆனால் சில பிரச்சினைகள் தொடர்பாக உரிய தீர்வு கிட்டுவதற்கு நீண்ட காலம் காத்துக் கொண்டிருக்க வேண்டும்.

நீதி மன்றங்களில் இடம்பெற்ற, இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற பல விசித்திரமான வழக்குகளைப் பற்றி நாம் கேள்விப் பட்டிருக்கின்றோம். அதிலும் நம் நாட்டில் காலம் சென்ற பிரபல தமிழ் சட்டத்தரணியான ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பல வழக்குகள் தொடர்பாக இன்று கூட மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றன.



அவரின் விவாதத் திறமை, தனது கட்சிக் காரரின் வழக்கை வென்று கொள்ள அவர் கையாளும் தந்திரோபாயம், சாணக்கியம் போன்றவை அன்று பலரால் கவரப்பட்டன. அவர் அன்று வாதாடிய வழக்குகளை நேரில் பார்ப்பதற்கு மக்கள் முண்டியடித்துக் கொண்டு நீதிமன்றம் செல்வார்கள். அவர் உள்நாட்டில் மாத்திரமல்ல பல வெளிநாடுகளில் கூட தனது வாதத்திறமை ஊடாக தனது பெயரையும், புகழையும் நிலைநாட்டியுள்ளார். சட்டத்துறையில் அவரை எவருமே எளிதில் மறந்துவிட முடியாத அளவுக்கு அவர் பல சாதுரியங்களை புரிந்துள்ளார்.

மேலும் அன்று அவர் வாதாடும் வழக்குகளை பார்ப்பதற்கு மட்டுமல்ல பல சிரேஷ்ட பிரபல்யம் வாய்ந்த பல சட்டத்தரணிகள் வாதாடும் வழக்குகளையும் பார்க்க நாடளாவிய வகையில் பார்வையாளர்களாக மக்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வார்கள். ஆனால் இன்று அந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. வீணாக அங்கு சென்று பெறுமதிமிக்க தங்கள் காலத்தை இழக்க விரும்பாதவர்கள் இவ்வாறு கூறுவார்கள், 'ஏன் அங்கு சென்று நித்திரை தூங்க, வீட்டில் இருந்தால் காலை கையை நீட்டி சுகமாக நித்திரை கொள்ளலாமல்லவா?'

சில பிரச்சினைகள் தொடர்பாக நியாயம் கோரி நீதிமன்றம் செல்பவர்கள் எப்பொழுதும் தங்கள் பக்கமுள்ள நியாயம் ஜெயிக்க வேண்டுமென்பதிலே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள் அதற்காக எவ்வளவு பணத்தையும் தமது சட்டத்தரணிக்கு செலுத்த பின் நிற்கமாட்டார்கள். சில சட்டத்தரணிகள் தாங்கள் அறவிடும் பணத்திற்கு ஏற்ப மனசாட்சியுடன் நடந்து கொள்வார்கள். சிலர் அப்படியல்ல வாதியிடமோ, பிரதிவாதியிடமோ கரக்கக் கூடியளவுக்கு பணத்தை கரந்துவிட்டு இடைவழியிலே அம்போ என்று கைவிட்டு விடுவார்கள்.

வழக்கு வென்றால் 'எப்படி எனது வாதம்?' என்று தனக்குத் தானே புகழாரம் சூட்டிக்கொள்வார் சட்டத்தரணி. அதே வேளை வழக்கில் தோல்வியடைந்தால் முழுத்தவறையும் தனது கட்சிக்காரர் மேல் சுமத்தி தான் தப்பித்துக் கொள்வார். அவைதான் இன்று பல நீதிமன்றங்களில் இடம்பெறும் வழமையான சம்பவங்களாகும்.

நகராட்சி மன்றமொன்றில் கூலித்தொழிலாளியாக பணிபுரிந்து கொண்டிருந்த அவனுக்கு வசிப்பதற்கு தகுந்த இருப்பிடம் இல்லாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தான். அந்த ஊரில் பல பேர் இருந்தும் அவனுக்கு உதவ எவரும் முன்வரவில்லை. இருந்தும் கருணை உள்ளம் கொண்ட ஆசிரியர் ஒருவர் அங்கு முன்வந்தார்.

மேலும் அவனுக்கும், அவன் குடும்பத்தினருக்கும் தனது காணியின் ஒரு பகுதியில் இருப்பதற்கு இடமளித்திருந்தார் அந்த ஆசிரியர். ஆனால் அவன் ஆசிரியருக்கு தெரியாமல் தவறான தகவலை சமர்ப்பித்து திருட்டுத்தனமாக காணி அனுமதிப் பத்திரத்தை பெற்றிருந்தான். அவனுக்கு கல்வி அறிவு அறவே இல்லாததினால் அப்படியொரு கீழ்த்தரமான செயலை செய்திருந்தாலும், கல்வி அறிவு கொண்ட அந்த ஆசிரியர் அவனை விட்டு வைப்பாரா? என்ன!!

உரிய செயலகத்திற்கு அது தொடர்பில் அறிவித்து எப்படியோ அவன் பெற்றிருந்த காணி அனுமதிப் பத்திரத்தை உடனடியாக செயல்படும் வகையில் இரத்துச் செய்து விட்டார். அது மாத்திரமல்ல நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்தல் கொடுத்ததை அடுத்து குறித்த காணியில் நிர்மாணிக்கப்பட்ட அவனது முழு நிர்மாணங்களும் அனுமதியற்றவை என்பதை அடிப்படையாக கொண்டு சகலவற்றையும் அழிப்பதற்கு நீதவான் நீதிமன்றம் கடும் கட்டளையையும் வழங்கி இருந்தது.



மேலும் அவன் கல்வியறிவற்றவன் என்பதை நன்கறிந்த அவனது சட்டத்தரணி, 'அது எப்படி கட்டடங்களை அழிப்பது? இன்று இலங்கை முழுவதும் எத்தனையோ பேர் அனுமதியற்ற கட்டடங்களிலும், அரச ஒதுக்கீட்டு காணிகளிலும் வாழ்ந்துவரும் பொழுது உனக்கு மாத்திரம் அவ்விதமான கட்டளை எப்படி வழங்கமுடியும்? இது ஒரு தலைப்பட்சமான தீர்ப்பு, எனவே மறு பரிசீலனை செய்ய மனுவை சமர்ப்பிக்க வேண்டும்' என்று கூறி கட்டளையை இடைநிறுத்தி கட்டளைக்கெதிராக வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார். அவனது சட்டத்தரணி தற்பொழுது அந்த வழக்கை காலவரையறை இன்றி நீடித்துக் கொண்டே செல்கிறது.

சகலவற்றுக்கும் அந்த ஆசிரியரே காரணம் என்பதால் அடிக்கடி அவர் மேல் பொய்யான புகார் களை அவன் காவல் துறைக்கு கொடுத்து வந்தான். அதனால் காவல்துறையினர் பிரதேசத்தின் அமைதிக்கு பங்கம் விளைவித்தல் எனும் குற்றச்சாட்டின் பேரில் இரு சாராருக்கும் எதிராக நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

'நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறொன்றும் இல்லை' என மன்றில் சத்தியம் செய்த அவன் அன்று தனக்கு நேர்ந்த சம்பவத்தை அங்கு விபரித்தான். 'நான் வீட்டில் இல்லாத சமயம் எனது அயலவரான இந்த ஆசிரியர் எனது வீட்டுக்குள் அத்துமீறி புகுந்து அங்குள்ள எனது குடும்பத்தாரை அச்சுறுத்திவிட்டு மேசை மேல் இருந்த எனது பைபிள் நூலை திருடிச் சென்றுள்ளான். அந்த நூலுக்குள் பணமாக ரூபா 1000 வைத்திருந்தேன். அதையும் அவர் களவாடிச் சென்றுள்ளார்.'


இது தான் அவனது முறைப்பாடு, நீதவான் இரு சாராரையும் நன்கு அவதானித்து விட்டு வழக்கு தாக்கல் செய்த காவல்துறையினரிடம் மேலும் விளக்கத்தை கோரினார். இங்கு பிரசன்னமாக இருக்கும் இரு சாராருக்கும் இடையில் நீண்டகாலமாக பகையுண்டு. அதற்கு காரணம் காணித்தகராறே. முறைப்பாட்டுக்காரர் அன்று குறித்த ஆசிரியருடன் சச்சரவில் ஈடுபட்ட சமயம் தனது கையில் வைத்திருந்த அந்த பைபிள் நூலை கைதவறி சம்பவம் நடந்த இடத்தில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார். மேலும் அவர் தம்முடன் வீண் சச்சரவுக்கு தமது வீடு தேடி வந்தமைக்கு அந்த பைபிள் நூல் தடயப் பொருள் என இங்கு குற்றம் சாட்டப்பட்டவர் அதை எம்மிடம் சமர்ப்பித்துள்ளார்'. என காவல் துறையினர் தமது அறிக்கையை சமர்ப்பித்திருந்தனர்.

நீதவான் குறித்த பைபிள் நூலை வேண்டி அங்கு பணம் வைத்திருந்தமைக்கு ஏதும் ஆதாரம் உண்டா என பரீட்சித்துப் பார்த்தார். அங்கு அடையாளங்கள் ஏதும் தென்படவில்லை. நீண்டகால பகையாளியான எனது கட்சிக்காரர் பட்டபகலில் முறைப்பாட்டுக் காரரின் வீட்டுக்குச் சென்று அந்த நூலையும், பணத்தையும் திருட வேண்டிய அவசியமில்லை. அவரிடம் திருட்டுக்குணம் இருக்குமானால் அந்த வீட்டிலுள்ள விலை உயர்ந்த யாதும் பெறுமதியான பொருளை திருடி இருக்கலாம். ஆனால் அவ்விதமான எந்த வித திருட்டும் அங்கு இடம்பெறவில்லை.

மேலும் ஒருவர் தனது பணத்தை எந்தவொரு நூலுக்குள்ளும் வைக்கமாட்டார். அத்துடன் எனது கட்சிக்காரருக்கு அந்த நூல் தொடர்பாகவும் அதற்குள்ளே பணத்தை முறைப்பாட்டுக்காரர் வைத்திருந்தார் எனவும் முன்கூட்டியே அறியா திருப்பவர். முறைப் பாட்டுக்காரர் தனது பகைமையை தீர்த்துக் கொள்வதற்காகவும் தானே வீண் வம்புக்குச் சென்றமையை மறைப்பதற்காகவும், இவ்விதம் உண்மைக்கு புறம்பாக முறைப்பாட்டை முன்னெடுத்துள்ளார்.

எனவே நிரபராதியான எனது கட்சிக்காரரை விடுவித்து பொய்யான முறைப்பாட்டை செய்த முறைப்பாட்டுக் காரருக்கு தக்க தண்டனை வழங்குமாறு மன்றை மிக விநயமாக கேட்டுக் கொள்கிறேன் என சட்டத்தரணி தனது வாதத்தை முடித்து வைத்தார்.

உலகத்திலே உள்ள புனித நூல்களில் பைபிளும் ஒன்று. அதை அவமதித்ததுமல்லாமல் பொய்யான விடயத்திற்கு அதை சாட்சியாக உபயோகித்து சட்டத்தையும் நீதிமன்றத்தையும் அகௌரவப்படுத்திய மைக்கு தண்டனையாக ரூபா1000 செலுத்தும் படியும், தவறின் மூன்று மாத சிறைத்தண்டனை யை அனுபவிக்க நேரிடும் எனவும் மன்றம் தீர்ப்பளித்தது. அவமானத்தினால் முகத்தில் அசடு வழிய அவன் மன்றத்தை விட்டு வெளியேறினான்.



தடியைக் கொடுத்து அடியை வேண்டிய நிலைக்கு அவன் ஆளானான்.

- பாலையூற்றான் -

## பூனைக்குட்டியின் அதிர்ஷ்டம்

அமெரிக்காவில் உள்ள Erran Frazier என்பவர் தனது காரின் அடிப்பகுதியில் பூனைக்குட்டி ஒன்று சிக்கியிருப்பதை உணர்ந்த அவர், காரின் பக்கவாட்டு பகுதியை சிறிதளவு ஓட்டை போட்டு பூனைக்கு தேவையான உணவுகளை வைத்துவிட்டு சற்று நேரத்தின் பின்னர் பார்த்தபோது அந்த உணவு காலியாகியிருந்தது.

ஆனால் பூனைக்குட்டியின் சத்தம் மட்டும் நிற்கவில்லை. பின்னர் மீண்டும் ஒரு பகுதி காரை ஓட்டை போட்டு காரின் உள்பகுதியில் சிக்கியிருந்த பூனைக்குட்டியை வெளியே எடுத்து வீட்டு விலங்குகளை காக்கும் அமைப்பு ஒன்றில் ஜாக்கிரதையாக சேர்த்துள்ளார்.



## புதிய பயணம்

கலிபோர்னியா விமான நிலையத்தில் Yahya Abdi என்ற சிறுவன் விமானம் கிளம்புவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு யாருக்கும் தெரியாமல் விமானத்தின் சக்கரம் உள்ளே இழுக்கப்படும் பகுதியில் ஒளிந்து கொண்டான். இந்த சிறுவனுடைய தந்தையும், சித்தியும் சேர்ந்து கொடுமைப்படுத்தியதால் அவர்களிடம் இருந்து தப்பித்து ஹவாய் தீவில் அகதியாக இருக்கும் தனது தாயாரை பார்ப்பதற்காக இவன் விமானத்தில் சென்றதாக கூறப்படுகிறது.



எவ்வித பாதுகாப்பு உபகரணமும் இன்றி சக்கரம் இருக்கும் பகுதியில் சுமார் 35000 அடி பறந்த விமானத்தில் சென்ற இச்சிறுவனுக்கு சிறுகாயம் கூட ஏற்படவில்லை என்பது ஆச்சரியப்படுத்தக்கது.

## தூது சென்ற பூனைக் குட்டி

தனது விருப்பம் நிராகரிக்கப்படாத வகையில் தன்விருப்பத்தை வெளியிடுவதற்கு விநோதமான வழியொன்றை பின்பற்றினார். 'எனது புதிய டாடியை திருமணம் செய்துகொள்வாயா?' என எழுதப்பட்ட அட்டையொன்றையும் திருமண நிச்சயதார்த்த மோதிரத்தையும் பூனையொன்றின் கழுத்தில் தொங்கவிட்டு தனது விருப்பத்தை வெளியிட்டார் அந்த இளைஞர்.

அழகிய பூனைக்குட்டியுடன் கூடிய கோரிக்கையை யாருக்குத்தான் இலகுவில் நிராகரிக்க மனம் வரும்? அந்த இளைஞரின் விருப்பத்தை யுவதி ஏற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் மழை நாளில்

சிறுகதை

ஜன்னலைத் திறந்தேன். 'சிலீர்' எனக் காற்றும் சாரலும் வந்து முகத்தில் மோதின. நல்ல மழை பார்த்து எத்தனை நாளாயிற்று. ஜன்னல்



கம்பிகளில் என் கன்னங்கள் பட, கன்னம் தொடங்கி உயிரின் கடைசி முடிச்சு வரைக்கும் இனம் புரியா சிலிர்ப்பு. இந்நேரம் அவள் இங்கு இருந்திருந்தால் ஜன்னலை மூடச் சொல்லி இருப்பாள்.

எல்லோரையும் போலத்தான் அவளும். வெயில் கொளுத்தும்போது, 'ஸ்...அப்பா! ஒரு மழை அடிச்சா நல்லா இருக்குமில்ல' என்பாள். சிறு தூறல் விழுந்தால் போதும், அவளுக்கு ஜன்னல்களும், கதவுகளும் அடைக்கப்பட்டாக வேண்டும்.

எனக்கு அப்படியில்லை. சின்ன வயதிலிருந்தே மழையை ரசிப்பது மட்டுமல்ல அதில் குளிரக் குளிரக் குளிக்க வேண்டும். மனதின் அழுக்கெல்லாம் கரைந்து, மறைந்து புதிதாய் பிறந்தாற்போல ஆகும்வரை மழையில் நனைந்துக் கொண்டே நடக்க வேண்டும்.

மனம்போல் அமைந்தது கல்லூரி வாழ்க்கையும். வெளியூரில் தங்கிப் படித்ததால் மழையில் நனைவதைத் தடுப்பாரில்லை. மழை வந்ததும் அறையை விட்டு நானும் கிளம்பி விடுவேன். ஆளரவமற்ற சாலையில் மழை அம்புகளை மேனியில் தாங்கியபடி நடக்கத் தொடங்குவேன்.

கேசம் கலைத்து உச்சந்தலையில் விழுந்து நெற்றியின் வழியே இறங்கி மூக்கின் நுனியில் வந்து நின்று கொண்டிருக்கும் மழைத்துளி பிடிக்கும். வெட்ட வெளியில் நின்று இரு கை விரித்து மழைத்துளிகளைச் சேகரித்துப் பருகப் பிடிக்கும். மழையில் நனைவதைப் பொறுத்தவரை ஊருடன் ஒத்து வாழ் என்பதில் எனக்கு உடன்பாடில்லை.

பள்ளிக் காலத்திலும் வகுப்புகள் நடக்கையில் மழை பெய்தால் எனக்கு இருப்பு கொள்ளாது. வானம் தொடுக்கும் மழைச் சரத்தை மார்பில் ஏந்தாமல் வகுப்பறையில் தமிழ் வீரம் என்ன சுகம் ஓடும் சிற்றோடையாய் மழை நீரோட, வகுப்பு முடிந்ததும் நானே கப்பல் விடும் சிறு பையன் ஆவென்.

இப்போதோ மழையில் நனைவதே அரிதானது. மழை பெய்யும்போது அலுவலகத்தில் இருந்தாலொழிய மழையில் நனைவது சாத்தியமில்லை.

அலுவலை விரைந்து முடித்துவிட்டு நனைந்தபடி வீட்டுக்கு வந்ததுண்டு. 'இப்ப என்ன ஓணமா ஓடிப்போகுது ஆபிஸ்ல இருந்து கொஞ்சம் லேட்டாதான் வந்தா என்ன அல்லது சீக்கிரம் கேட்டுக்கிட்டு வரணும். ரெண்டும் இல்ல. மழையில் நனைஞ்சு உடம்புக்கு ஏதாவது வந்தா என்ன செய்ய' எனத் தொடங்கி குறைந்தது மூன்று நாட்களாவது அதுகுறித்து முணுமுணுப்பாள் மனைவி. அவள் கோபச் சாரலுக்குப் பயந்தே இரண்டு புதுக்குடைகளும், ஒரு மழைக்கோட்டும் வாங்க வேண்டியதானது. அலுவலகம் புறப்படும்போது மழை பெய்வதுபோல இருந்தால் மறக்காமல் கையில் குடையையும் திணிப்பாள். இதற்காகவே அவளுக்கு ஞாபக மறதி வேண்டும் என மழையையே வேண்டிக் கொள்வேன்.

அவள் பேசுவதுகூட மழைபோலத்தான். சாரலாய், தூறலாய், அடைமழையாய், கோடை மழையாய்... இருக்கும் அவள் பேச்சு. சட்டென்று சமரசமும் ஆகிவிடுவாள். 'தடிமன் பிடிச்சுக் கிட்டா உங்களுக்குத் தாங்க முடியாது. குழந்தை மாதிரி ஆயிடுவீங்க. அதுக்காகத்தான் சொல்றேன்" என்பாள்.

அதிகம் படித்ததில்லை அவள். 'எட்டாங் கிளாஸ் வரைக்கும் படிச்சிருக்கேன்' எனத் திருமணமான இந்த ஆறு மாதங்களில் பத்து முறையாவது சொல்லியிருப்பாள். எழுத்துக் கூட்டிப் படிப்பாள். வளைந்து நெளிந்து ஓடும் மழை நீராய் கையெழுத்துப் போடுவாள்.

பிடிவாதமும், சற்றே முன்கோபமும் உள்ள அவளே ஒரு பாமரக் கவிதைதான். வலுக்கட்டாயமாக ஏதேனும் கவிதைப் புத்தகம் கொடுத்து வாசிக்கச் சொன்னால், சில வரிகள் வாசிப்பதற்குள் கொட்டாவி விட்டுவிட்டு உறங்கச் செல்வாள். இல்லையெனில், 'எனக்கு நாலு வரி படிக்க முடியல. நீங்க எப்படி இப்படி இவ்ளோ புக் படிக்கிறீங்க' எனப் புகழ்ந்தபடி மெல்ல நழுவுவாள், துலக்காமல் கிடக்கும் பாத்திரங்களையோ, துவைக்கக் கிடக்கும் துணிகளையோ சாக்காகக் கொண்டு.

ஜன்னலுக்கு வெளியே தோட்டத்தில் அவள் வைத்திருக்கும் ரோஜாச் செடி முதல் மொட்டு விட்டிருக்கிறது. விதவிதமாய் செடிகள் வளர்க்க வேண்டும் என்பது அவள் ஆசை. முதல் முயற்சியில் நான்கு வண்ணங்களில் ரோஜாக்களும், ஒரு மல்லிகையும் ஒரு மாதத்துக்கு முன் வாங்கி வரச் சொன்னாள். அவளே குழிபறித்து நட்டு, நீரூற்றி செடிகளோடு சிநேகம் காட்டினாள்.



மொட்டுவிட்ட ரோஜா இன்னும் ஓரிரு நாள்களில் பூவாகலாம். 'முதல் பூவை உங்க கையால எனக்கு வச்சிவிடணும்' என என்னிடம் அவள் இதுவரை பலமுறை சொல்லியிருப்பாள். அவள் வளர்க்கும் ரோஜாச் செடியின் முதல் பூவை நான் சூட்டி விடுவதில்தான் அவளுக்கு எத்தனை மகிழ்ச்சியும், பாசமும்!

பாசமா? அது அத்தனைப் பாசம் இருந்தால் அப்படி ஒரு சின்ன ஒன்றுமற்ற விஷயத்துக்காக கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டுக்குச் செல்வாளா, நீ எக்கேடும் கெட்டுப் போ என்றபடி. என்ன விஷயத்துக்காகக் கோபித்துச் சென்றாள் என்பதுகூட எனக்கு நினைவில்லை. கோபித்துச் சென்றவள் அவள். அவளே போன் செய்யட்டும் என்றே நானிருந்தேன். எப்படியும் நான் பேசிவிடுவேன் என அவள் அங்கிருக்கிறாளோ? வீட்டுக்குப் போய் ஆறு நாட்களாகியும் இதுவரை ஒரு போன்கூட செய்யவில்லை. அவளே பேசட்டுமே முதலாவதாக!

மழை இன்னும் ஓய்ந்தபாடில்லை. எலும்பைத் துளைக்கும் இந்தக் குளிருக்கு இதமாய் அவள் அருகில் இருந்தால் என்னும் நினைப்பே என்னுள் மழைக்காகக் காத்திருக்கும் கோடைக்கால பூமிபோல உஷ்ணத்தை ஏற்படுத்தியது. அவளின் சிவந்த மெல்லிய காது மடல்களின் விளிம்பை விரல்களால் தீண்ட வெட்கத்தில் சிவக்கும் முகத்தை கைகளால் மூடிக் கொள்ளும் அவளின் குறும்புத்தனம் கண்முன்னே வந்து சென்றது.


இந்த மழைக்குச் சூடாக ஒரு கப் காபி பருகினால் இதமாக இருக்கும் எனத் தோன்றியது. கேஸ் அடுப்பைப் பற்றவைத்து காபி தயாரித்தேன். பாத்திரங்கள் அங்குமிங்கும் சிதறிக் கிடந்தன. ஒருவாய் காபி பருக கசந்து கிடந்தது. இன்னும் சிறிது சர்க்கரை கலந்தேன். கசப்பு சற்றே குறைந்திருந்தது என்றாலும் இன்னும் கொஞ்சம் சர்க்கரை கலக்கலாம் என்று வாய், சிறிது கலக்க, தித்திப்பு திகட்டியது. அவளாயிருந்தால் என் ரசனைப்படி காபி தயாரித்து கொடுத்திருப்பாள். திருமணமாகி இத்தனை நாள்களில் ஒருநாள் கூட காபியில் இனிப்பு கூடியதுமில்லை, குறைந்ததுமில்லை. எங்கு சுற்றியும் என் மனது அவளிடமே வந்துவந்து நின்று விடுகிறது. காபியை கஷ்டப்பட்டு விழுங்கிவிட்டு, தம்ளரைக் கழுவிவைத்துவிட்டு வாசலுக்கு வந்தேன்.

செல்போன் ஒலித்தது. இந்நேரம் யாராக இருக்கும் யோசனையுடன் எடுத்தேன். புதிய எண்ணாக இருந்தது. 'ஹலோ' என்றேன். எதிர்முனையில் பேச்சுக்குரலில்லை.

இரண்டு, மூன்று முறை ஹலோ சொல்ல வேண்டியதாயிற்று. சரி, யாருக்கோ பொழுதுபோகவில்லை போலும் என நினைத்தவாறு இணைப்பைத் துண்டிக்க முயன்றேன்.

'போனை வச்சிடாதீங்க, நான்தான்...' என்றது எதிர்முனைக் குரல். எனக்குள் இன்ப மின்னல். அவள்தான். 'நான் தானா... யாரு'? மகிழ்ச்சியை வெளிக்காட்டாதவாறு வீராப்பாய் கேட்டேன். 'நான்தான்' என்றாள் மீண்டும்.

'என் பேரைச் சொல்லத்தான் வெட்கப்படுவே. உன் பேரைச் சொல்ல என்ன வெட்கம்'?
'சௌக்யமான்னு கேட்க மாட்டீங்களா'?
'சௌக்யமா இருக்கத்தானே பிறந்த வீட்டுக்குப் போயிருக்கே. அப்புறம் சௌக்யமாத்தானே இருப்பே'
'நீங்க சௌக்யமா'?
'நீ சௌக்யம்னா, நானும் சௌக்யந்தான்'
'இன்னும் கோபம் குறையலியா'?
'இருந்தாதானே குறையறதுக்கு'
'எப்போ வருவேன்னு கேட்க மாட்டீங்களா'? குழைந்தாள்.
'உனக்கு எப்போ என்னை பார்க்கணும்னு தோணுதோ அப்ப புறப்பட்டு வா'
'நான் நாளைக்குக் காலையில வர்றேன்' என்றவள், 'இன்னைக்குக் காலையில டாக்டர் வீட்டுக்கு நானும் அம்மாவும் போனோம்' என்றாள் மெதுவாக.
'உடம்புக்கு என்ன'? மனம் பதறியது.
'நீங்க பயப்படுற மாதிரி ஒண்ணுமில்ல. செக்கப்புக்குத்தான்'
'டாக்டர் என்ன சொன்னார்'?
'நாற்பது நாள் ஆச்சாம். நீங்க அப்பாவாக போறீங்க' எனக்குள் ஆயிரம் சந்தோஷ மின்னல்கள் அணிவகுத்தன.
'நெஜம்மா'?
'ம்'
.........
'உடம்பைப் பத்திரமா பாத்துக்கோ. எத்தனை நாள் தங்கி ஓய்வெடுக்கணுமோ எடுத்துக்கோ'
'நீங்க இல்லாம போரடிக்கிது. உங்களைப் பாக்கணும்போல இருக்கு. நாளைக்கு நான் அப்பாவைக் கூட்டிக்கிட்டு வர்றேன்'
'ம். வேண்டாம். நானே உன்னைக் கூப்பிட வர்றேன்'
'அலைச்சல் தானே உங்களுக்கு'
'பரவாயில்லை'
'அப்புறம் உங்க இஷ்டம். உங்களை என் மனம் ரொம்பத் தேடுது' குரலில் தெரிந்த ஏக்கம், மனதுக்குள் என்னவோ செய்தது.
'சரி வச்சிடட்டுமா, நாளைக்கு வர்றேன்'
போனை வைத்தேன்.



இன்னும் மழை விடவில்லை. எனக்கு குளிரக் குளிர நனைய வேண்டும் போலிருந்தது. மொட்டை மாடிக்கு வந்தேன். கை, கால்களைப் பரப்பியவாறு தரையில் படுத்தேன். சரம் சரமாய் மழை அம்புகளை என்மீது எய்தது வானம். காதலியாய், மனைவியாய் தெரிந்த மழை இப்போது தாய்மை நிறைந்ததாகவும் தெரிந்தது.


நன்றி - தினமணி கதிர், தமிழ் கூடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருவகாலம்

பட்டுப்
போனோமா?
பூ - காய் - கனி
இலை - கிளை -
வேர்
அத்தனையும்
இழந்தோமா?
இல்லை
பருவகால
மாற்றமிது
துளிர் விடுவோம்
மீண்டும் ..
விருட்சமாவோம்
நிழலும்
தருவோம்

– திருமலை சுந்தா –



## பாரத பிரதமரே!!

பாரத நாட்டின்
பண்பாட்டு சிகரமாக
பிரதமர் பதவியேற்ற
பார்புகழ் மோடி ஐயா
அன்னையின் அடிகள் தொட்டு
ஆணையும் பெற்றுக் கொண்ட
புனிதனாக வாழ்ந்திட்ட
புண்ணியனே இல்லறத்தாள்
இணையும் சேராது
பிரமச்சாரியாய் புதுமை கண்ட
குஜராத்தின் முதலமைச்சராய்
பன்னிரண்டு ஆண்டுகள்
புகழுரை பரப்பிய புத்தொளியே
எங்கள் நிலையையும் பாரப்பா!
இனிய தமிழினத்தார் இன்றோ
அகதிகளாக அல்லல்பட்டு சொந்த
மண்ணையும் தொலைத்து
வாடி வதங்கும் நிலை பாரய்யா
தாடி வளர்த்த மோடி ஐயா
வடக்கு கிழக்கு தமிழின்
தலை குனிவை நீதி
நியாயம் முன்னே நின்று
சரிநிகர் சமாதானமாக வாழ
ஆட்சியின் வலுவாலே
அனைத்தும் செய்வாய் ஐயா!

சீ.என்.துரைராஜா

## சற்று நாள் முன்னரான வலிமை

எங்கோ
சிதறிப்போன
பிழம்புகளை
விழுங்கி உமிழ்வதற்காக
புறப்பட்ட கதிர்கள்

கீற்றுக்களோடும்
மலைகளோடும்
அலைகளோடும்
நிலத்தோடும்
பரந்த அகன்ற
மரத்தோடும்
முட்டித் தீர்த்து

ஒருவாறு
விழுங்கி உமிழ்ந்தன
நிராதரவாய் நின்ற
பனித்துளிகளை

நால் : குறி இடல்
திவ்வைநாதன் பவித்ரன்

## மாசற்ற புனிதரின் வாழ்த்துக்கள் பலிக்கும்

சேனையூர் மதார் கிழக்கு


வசந்தம் எப்போதும்
வீசாது
வாழ்த்துக்கள் எப்போதும்
பலிக்காது - அதுவும்
வாழ்த்தும் மனிதர்
மாசற்ற புனிதராயிருந்தால்
பலிக்கும்
உண்மைகள் எப்போதும்
ஒழியா
உலாவரும் பொய்மைகள்
எப்போதும் நிலையாது!
சம நீதி ஒருபோதும்
பொய்க்காது.
உழைத்துண்டு வாழாத
வாழ்க்கை
ஊழலால் வாழ்கின்ற
வாழ்க்கை
அழைப்பின்றி செய்கின்ற
விருந்து - ஒருபோதும்
அனுகூலம் தராது உண்மை.

# தம்பலகாமத்து அண்ணாவிமார்கள் பற்றிய ஒரு ஞாபகமீட்டல்

பாகம் : 03

கடந்தவார தொடர்ச்சி .. ..

'ஸ்ரீ விக்கிரம சிங்கன்' 'நளதமயந்தி' 'மயில்ராவணன்' 'பவளக்கொடி' போன்ற நாடகங்களைத் தொடர்ந்து மேடையேற்றியுள்ளர்.



இவர் தான் நடித்த நாடகமொன்றில் 'யமன்' பாத்திரத்தில் தோன்றி இரசிகர்கள் அனைவரையும் பிரமிக்க வைத்தார். இதனால் பின்னாட்களில் இவர் செல்லமாக 'யமன்' என்றே அழைக்கப்பட்டார்.

கள்ளிமேட்டில் உள்ள ஆலயடிவேள்வி வளாகத்திலும் கோயில்குடியிருப்பிலும் பலதரமான நாடகங்கள் இவரால் மேடையேற்றப்பட்டன. இந்தியக் கலைஞர்களான ஆர்மோனிய வித்துவான் சின்னையா சாய்வு, மிருதங்க வித்தவான் மதறிசா , பிற்பாட்டுக்காறர் கரீம்பாய் மற்றும், வேல்நாயக்கர் , எஸ்.ஆர்..கமலம் போன்றோர்களின் தொடர்பால் பல்துறைகளிலும் தேர்ச்சிபெறும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. நினைத்தவுடன் ஒரு நாடகத்தை ஒத்திக்கை இல்லாமல் மேடையேற்றும் அபார ஆற்றல்கொண்ட இவர் சிறந்த சித்த வைத்தியருமாவார்.

### திரு.காளியப்பு முருகுப்பிள்ளை அண்ணாவியார்

தம்பலகாமம் கள்ளிமேட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.காளியப்பு முருகுப்பிள்ளை அண்ணாவியார் சிறந்த பாடகராக விளங்கினார். இவரது இசைக்கச்சேரிகள் திருகோணமலை ,நிலாவெளி ,சம்பூர் ,கட்டைபறிச்சான், சேனையூர் ,பாலம்போட்டாறு போன்ற இடங்களில் இடம்பெற்று மக்களின் பேராதரவைப் பெற்றது. வாய்ப்பாட்டுக் கலைஞராக விளங்கிய இவர் சிறந்த ஆர்மோனியக் கலைஞராகவும் விளங்கினார்..

### திரு.வடிவேல் சிவப்பிரகாசம் அண்ணாவியார்

தம்பலகாமம் கள்ளிமேட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.வடிவேல் சிவப்பிரகாசம் அண்ணாவியார் 1917 ஆம் ஆண்டு பிறந்தவர். கள்ளிமேட்டிலுள்ள வெள்ளைப்பிள்ளையார் ஆலய முதற் பூசகராகக் கடமையாற்றிய இவர் இனிய குரல்வளமும் , நன்றாககப் பாடக்கூடிய ஆற்றலும் பெற்றவர். சிறந்த நாடக இயக்குனராகிய இவர் தயாரித்த நாடகங்கள் கள்ளிமேடு ஆலயடி வளாகத்தில் மேடையேற்றப்பட்டன. 'ஹரிச்சந்ரா' 'சந்திரமதி' போன்ற நாடகங்கள் நல்ல வரவேற்பையும் பெற்றன. நாடக இயக்கம் ஒப்பனை என்பவற்றோடு தன்னால் தயாரிக்கப்படும் நாடகங்களில் முக்கிய பாத்திர மேற்று நடிக்கவும் செய்தார்.

எந்த நேரமும் சுறுசுறுப்பாகவும் புன்னகை ததும்பும் முகத்தோடும் காணப்படும் இவர் 1954ஆம் ஆண்டு தன் குடும்பத்தாருடன் முள்ளிப்பொத்தானைக்கு இடம் பெயர்ந்தாலும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயத்திற்கு வந்து பஜனை செய்யத்தவறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### திரு.சின்னத்துரை அண்ணாவியார்

தம்பலகாமம் சிப்பித்திடலில் வாழ்ந்த சின்னத்தம்பி அண்ணாவியாரைப் பற்றி பெரிதும் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆர்மோனியம் நன்கு வாசிக்கத்தெரிந்த இவர் நாடகங்களை நெறிப்படுத்தி மேடையேறிறினார் எனினும் அவை பற்றிய விபரங்களை அறிய முடியாதுள்ளது.

சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக சிறப்புடன் விளங்கிய தம்பலகாமத்து அண்ணாவிமார்களின் காலம் 10.07.1995ல் திரு.வடிவேல் சிவப்பிரகாசம் அண்ணாவியார் அவர்கள் இவ்வுலகைவிட்டு பிரிந்ததைத் தொடர்ந்து நிறைவு க்கு வந்தது. காலவோட்டத்தில் இனவன்முறை, இடப்பெயர்வு, இயற்கை அனர்த்தங்கள் என்ற அலைக்கழிவுகளைத் தொடர்ந்து மீள்குடியேற்றம், வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்ற சூழல்களுக்குள் சிக்கித் தவிக்கும் இக்காலகட்டத்தில் அண்ணாவிமார்களின் காலம் பற்றிய மீட்டுப்பார்ப்புகள் தம்பலகாமத்தில் அருகிப்போய்விட்டது. அவர்கள் தொடர்பான விபரங்களைப் பெறுவதும் சேகரிப்பதும் இன்றைய காலகட்டத்தில் கடினகாரியமாக உள்ளது.




தம்பலகாமத்தில் அண்ணாவிமார்களின் காலம் முற்றுப் பெற்றாலும் அவர்களைத் தொடர்ந்து நாடக முன்னெடுப்புகள் பலராலும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான திருமதி.சீதாலட்சுமி ஆசிரியை ,கவிஞர் திரு.பத்மநாதன் ஆசிரியர், தம்பலகாமத்தைச் சேர்ந்த கலாபூசணம் வயலின் மேதை திரு.சோமசுந்தரம், தம்பிலுவில் திரு.கண்ணமுத்து ஆசிரியர் , சட்டத்தரணி திரு.சிவகாலன், ஆசிரியைகளான திருமதி. கெங்காம்பிகை , திருமதி.கமலா , நாடக விற்பனர் திரு.வீரசிங்கம் போன்றோர்களால் நல்ல நாடகங்கள் நெறிப்படுத்தி மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1960 களில் தம்பலகாமம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய கலைப்புலமை மிக்கவர்களால் மீண்டும் நாடகங்களுக்கான புத்துயிர் கொடுக்கப்பட்டது. இவர்களின் முயற்ச்சியால் மேடையேற்றப்பட்ட 'இராஜராஜசோழன்' 'சாம்பிராட் அசோகன்' 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' 'சோக்கரடீஸ்' போன்ற நாடகங்கள் பலராலும் பாராட்டப்பட்டவை. இக்காலப் பகுதியில் மட்டக்களப்பைச் சேர்ந்த நாடகக் கலைஞர் திரு.வீரசிங்கம் தம்பலகாமம் வந்து நாயன்மார்திடல் வேள்வி வளாக முன்றலில் 'தூக்குத்தூக்கி' 'சுமதி எங்கே?' போன்ற சமூக நாடகங்களை மேடையேற்றினார். இந்நாடகங்கள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன.

இதன் பின்னர் பாடசாலைகளில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகளில் மட்டுமே நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வந்தன. பழமையில் அண்ணாவிமார்களால் வளர்க்கப்பட்ட அந்த அரிய கலை தம்பலகாமத்தில் அருகிவிட்டதென்றே சொல்லவேண்டும். எனினும் காலவோட்டத்தில் கலையின் வடிவம் மாறி தம்பலகாமத்து இளைஞர்களால் 'தமிழ்க் குறும்படங்கள்'தயாரிக்கும் முயற்சிகள் பாராட்டக் கூடியவகையில் வளர்ச்சி பெற்று வருவது மகிழ்சிக்குரிய விடயமாகும்.

இந்தவகையில் 2012 ஆம் ஆண்டில் சர்வதேச குறும்படப் போட்டியில் முதற்பரிசைத்



தட்டிக்கொண்ட சுசீதனின் 'அடிவானம் , 2008 இல் மனித உரிமை தினத்திற்காக நடத்தப்பட்ட போட்டியில் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்ட திருமதி பாலசாமுண்டேஸ்வரி கௌரிதரனின் 'வஞ்சகக் கடத்தல்“ ஜனார்த்தனின் இயக்கத்தில் உருவாகிய 'கடந்த பயணம்' , பிரசாத்தின் இயக்கத்தில் உருவாகிய 'தாய்' போன்ற குறும்படங்களைக் குறிப்பிடலாம். மேலும் பல இளைஞர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அறியக் கூடியதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

காலவோட்டத்தில் மறக்கப்பட்டு விட்டாலும் பல்தகமை கொண்ட அண்ணாவியார்கள் தம்பலகாமத்தில் வாழ்ந்த காலம் கலைகளின் பொற்காலம் எனத்துணிந்து கூறலாம்.

உசாத்துணை

01. தம்பலகாமத்தின் கலைப்பாரம்பரியம் - தம்பலகாமம். வே.தங்கராசா (றறற.பநநஎயயெவால.உழஅ)
02. நாடகக்கலை அருகி, அழியும் நிலை - தம்பலகாமம். க.வேலாயுதம்
03. திருகோணமலையின் நாடக முன்னோடிகள் - திருமலை நவம் – திருகோணமலைப் பிரதேச நாடக அரங்கப்பாரம்பரியம் 1994
04. ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி - க. சொக்கலிங்கம் 1977

முற்றும் ..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமந்தாவின் கால் பிடித்த சூர்யா



டோலிவுட் ஹீரோ மகேஷ் பாபு, பீச்சில் நடக்கும்போது அவரை பின்தொடர்ந்து கையையும், காலையும் ஊன்றி பட ஹீரோயின் வருவதுபோல் கடந்த 3 மாதத்துக்கு முன் ஆந்திராவில் போஸ்டர் ஒட்டப்பட்டிருந்ததற்கு நடிகை சமந்தாவும், சித்தார்த்தும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பெண்களை இழிவுபடுத்துவதுபோல் காட்சி இருப்பதாக குறிப்பிட்டு கண்டனம் தெரிவித்திருந்தனர்.

தற்போது பீச்சில் படுத்திருக்கும் சமந்தாவின் காலை சூர்யா தடவுவதுபோல் 'அஞ்சான் படத்தின் ஸ்டில் சமீபத்தில் வெளியானது. இதைப் பார்த்த மகேஷ்பாபு ரசிகர்கள் தற்போது போர்க்கொடி உயர்த்தி உள்ளனர்.

ஒரு நடிகையின் காலை ஒரு ஆண் பிடிப்பதுபோல் போஸ் கொடுத்திருப்பது எப்படி ஏற்க முடியும்? என்று சமந்தாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருத்து வெளியிட்டுள்ளனர். இது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## அடுத்த சூப்பர் ஸ்டார்



தமிழில் வெளிவரும் வார இதழ் ஒன்று தமிழ் சினிமாவில் அடுத்த சூப்பர் ஸ்டார் யார் என்று ஒரு கணக்கெடுப்பு நடத்தியுள்ளது. தற்போது அவ்வார இதழ் கணக்கெடுப்பின் முடிவை வெளியிட்டுள்ளது. அதில் விஜய் 12,80,300 வாக்குபதிவுகளை கொண்டு முன்னிலையில் உள்ளார். அஜீத் 12,17,650 வாக்குபதிவுகளை கொண்டு இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார். மேலும் சூர்யா (5,47,050) மூன்றாம் இடத்திலும், தனுஷ் (1,58,900) நான்காம் இடத்தையும் பிடித்துள்ளார்.

இன்னும் நான்கே நாட்களில் இளைய தளபதியின் பிறந்த நாள் வருவதற்குள், இப்படியான ஒரு செய்தி விஜய்யின் தீவிர ரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ரஜினி முருகன் - சமந்தா

இயக்குனர் பொன்ராமின் அடுத்த படத்தை லிங்குசாமியின் திருப்பதி பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கின்றது. இந்த படத்தில் சிவகார்த்திகேயன் ஹீரோவாக நடிக்கிறார். இந்த படத்திற்கு ரஜினிமுருகன் என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இந்த படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடிக்க சமந்தா ஒப்புக்கொண்டுள்ளார். கத்தி, அஞ்சான் மற்றும் விக்ரம் படத்தில் பிசியாக இருந்தபோதிலும், லிங்குசாமி தயாரிப்பு, மற்றும் தொடர்ச்சியாக ஹிட் கொடுத்த நாயகன் சிவகார்த்திகேயன் படம் என்பதால் இந்த படத்தை சமந்தா மிஸ் பண்ண விரும்பவில்லையாம்.



வரும் ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி முதல் படப்பிடிப்பு ஆரம்பமாக உள்ளது.

## கசிந்தது அந்தரங்கம்



இயக்குனர் எஸ்.எஸ்.ராஜமவுலி இயக்கிவரும் பாஹுபாலி திரைப்படத்தின் படப்பிடிப்பு தற்போது மிகவும் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இதில் நடிக்கும் நடிகர்கள் பயங்கர ரிஸ்க் எடுத்து நடித்து வருவதால் தினந்தோறும் படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பு சிறிது நேரம் உடற்பயிற்சி செய்துவிட்டுதான் படப்பிடிப்பு ஆரம்பிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். அதன்படி அனுஷ்கா மற்றும் சிலர் உடற்பயிற்சி செய்தபோது, மர்ம நபர் ஒருவர் வீடியோ எடுத்து இணையத்தில் பதிவு செய்துள்ளார்.

இரண்டடுக்கு பாதுகாப்பு படப்பிடிப்பிற்கு போடப்பட்டுள்ளது. இவ்வளவு பாதுகாப்பையும் மீறி அனுஷ்கா உள்பட அனைவரையும் வீடியோ எடுத்து இணையத்தில் கசியவிட்டது யார் என்று தெரியாமல் படக்குழுவினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## மோடியுடன் தளபதி



பல அரிய திட்டங்களாலும், அதிரடி நடவடிக்கையாலும் இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல போராடும் , தங்களுக்கு பாராட்டுக்கள். மற்றத் துறைகளை போன்று சினிமாத் துறையையும் தாங்கள் நேசிப்பவர் என்பதால், இந்த கோரிக்கையை தங்களுக்கு வைக்கிறேன்.

சினிமாத்துறைக்கு எதிராகவும், சினிமாத்துறையை நசுக்கி வரும் சேவை வரியை நீக்கி அழிந்து வரும் இந்திய திரையுலகை காப்பாற்றும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். என மோடிக்கு நடிகர் விஜய் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

# சினிமுரசு

## சினிமா குறுஞ் செய்திகள்



- **ஜெனிலியா கணவர் படம் சென்சார் போர்டு எதிர்ப்பு**

ஜெனிலியா கணவரான பாலிவுட் ஹீரோ ரிதேஷ் தேஷ்முக் நடித்த 'ஏக் வில்லன் படத்தில் பாவிக்கப்பட்டுள்ள 'ஹஜாம்' (முடிதிருத்துபவர்) என் வார்த்தை சில சமூகத்தினரின் எதிர்ப்பை உருவாக்கும் என்பதால் அந்த வசனத்தை சைலன் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட 7 இடங்களில் தணிக்கை குழு கட் செய்ய உத்தரவிட்டது.

- **ஊர் சுற்றும் இலியானா**

கிரிக்கெட் வீரர்களில் ஒருவரான விராட் கோஹ்லியுடன் இலியானா சமீபகாலமாக சுற்றிக்கொண்டு திரிகிறார்.

- **நடிகை அஞ்சலி அதிரடி**

கோலிவுட் தடைவிதித்தாலும் பரவாயில்லை. களஞ்சியத்தில் நடிக்கமுடியாது.அஞ்சலி அதிரடி

- **சிறுமியை வேலைக்கு அமர்த்தியதாக புகார்**

2 சிறுமிகள் குழந்தை தொழிலாளர்களாக பணிபுரிவதாக குழந்தைகள் நல கமிட்டியிடம் பெண் ஒருவரால் புகார் செய்யப்பட்டது. இதையடுத்து குழந்தைகள் நல கமிட்டி அதிகாரிகளும் அடையாறு போலீசாரும் அவரது வீட்டில் விசாரணை நடத்தினர்.

- **அறிமுகப்படுத்திய இயக்குனரை அவமானப்படுத்திய - திவ்யாஸ்ரீ**

இயக்குனர் பொன்ராம், தனது அடுத்த படத்தில் கதாநாயகியாக ஒப்பந்தம் செய்ய திவ்யாஸ்ரீயை அணுகியபோது, 'இப்போது தன்னுடைய சம்பளம் ஐம்பது லட்சம்' கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்தாராம் பொன்ராம்.

- **முத்தக்காட்சிக்கு தனி சம்பளம் - அலியா பட்**

ஒரு படத்திற்கு 3 கோடி சம்பளம் வாங்கும் ஆலியா, முத்தக் காட்சியும், நெருக்கமான காட்சிகளும் இருந்தால் ஒரு கோடி கூடுதலாக கேட்கிறாராம்.

- **தேசப்பற்றை நிரூபிக்க தொடர்ச்சியாக 12 மணி செக்ஸ் உறவு**

உலகக்கோப்பை கால்பந்து லீக் போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் சிலி வெற்றி பெற்றால் டுவிட்டரில் தன்னை தொடர்பு கொள்பவர்கள் அனைவருடனும் செக்ஸ் உறவு வைத்துக்கொள்ள தயார் என்று அதிரடி

## அப்சரஸ்

### திரை விமர்சனம்



பாரதிராஜாவின் அன்னக்கொடி படத்திற்கு பின்னர் நடிகை ராதாவின் மகள் கார்த்திகா கிளாமருடன் நடித்து வெளிவந்துள்ள படம்தான் அப்சரஸ். பிரபல ஓவியர் ரவிவர்மனின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதிதான் கதை என்று கூறப்படுகிறது.

பிரபல ஒளிப்பதிவாளர் சந்தோஷ்சிவன் ஒரு ஓவியர். அவர் ஓவியம் வரை மாடலாக வரும் பெண்களுடன் தொடர்பு வைத்துக்கொள்கிறார். சந்தோஷ் சிவன் முதலில் நித்யா மேனனை மாடலாக வைத்து ஓவியம் வரைகிறார். அவர் வரைந்த ஓவியங்களை பார்த்த நித்யாமேனன் அவர்மேல் ஈர்ப்பு கொண்டு அவருடனேயே வாழத் தொடங்குகிறார். ஆனால் ஓவியருக்கு தன்மேல் காதல் இல்லை என்றும், அவருக்கு பெண்களின் உடம்பும் ஓவியமும் மட்டுமே முக்கியம் என்பதை அறிந்து வேதனையால் இறந்துவிடுகிறார்.

பின்னர் சந்தோஷ் சிவன் கார்த்திகாவை தற்செயலாக பார்க்கிறார். அவருடைய அழகு ஓவியரை கவர்கிறது. அவரை கற்பனையாக வைத்து நிர்வாணமாகவும், பலபோஸ்களிலும் ஓவியங்கள் வரைகிறார். இந்த ஓவியங்களை பார்த்து முதலில் கோபப்படும் கார்த்திகா, பின்னர் ஓவியர் கூறும் புராண கதைகளை கேட்டு சமாதானம் ஆகிறார். இருவரும் காதல் கொள்கின்றனர்.

இந்நிலையில் ஓவியர் மீது போலீஸில் புகார் செய்யப்படுகிறது. அப்பாவி பெண்களை மயக்கி நிர்வாண படம் வரைந்து விற்பனை செய்வதாக அவர்மீது கூறப்பட்ட புகாரில் இருந்து சந்தோஷ் சிவன் தப்பித்தாரா? காதலி கார்த்திகாவை கைப்பிடித்தாரா என்பதுதான் க்ளைமாக்ஸ்.

ஓவியருக்குரிய அமைதியான ஆர்ப்பாட்டமில்லாத நடிப்பு சந்தோஷ் சிவனுக்கு. பாத்திரத்திற்கு கச்சிதமாக பொருந்தியுள்ளார்.



கார்த்திகாவின் அதிரடி கவர்ச்சி அதிர வைக்கிறது. குறிப்பிட்டு சொல்லும்படியான நடிப்பு இல்லையென்றாலும், ஓவியத்திற்கு போஸ் கொடுக்கும்போது அவர் தரும் முகபாவனைகள் ரசிக்கும்படி உள்ளது. நித்யாமேனன், மல்லிகா கபூர், பூர்ணா ஆகியோர்களும் ஓவியத்திற்கு போஸ் கொடுக்கும் நடிகைகளாக வருகின்றனர்.

ரவிவர்மனின் கதையை சொல்வதைவிட கவர்ச்சியை அதிகம் வெளிப்படுத்துவதில் தான் இயக்குனர் லெனின் ராஜேந்திரனின் எண்ணம் என்பது படம் பார்க்கும்போது தெரிகிறது. மெதுவான திரைக்கதை படத்திற்கு மைனஸ். மது அம்பாட்டின் ஒளிப்பதிவு அபாரம்.

கவர்ச்சிக்காக எடுக்கப்பட்ட ஓவியம்தான் அப்சரஸ்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சாதனையில் I Heart Radio




iHeartRadio எனும் டிஜிட்டல் இசை சேவையானது 2011ம் ஆண்டின் பிற்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச்சேவை தற்போது 50 மில்லியன் பயனர்களை எட்டி சாதனை படைத்துள்ளது.

இதேவேளை பல்வேறு இயங்குதளங்களில் செயற்படக்கூடிய இச்சேவையின் அப்பிளிக்கேஷன்களும் 345 மில்லியன் தடைவைகள் தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இச்சேவையில் 1500 வானொலி அலைவரிசைகளை கேட்டு மகிழ முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அன்ரொயிட் - ரவுட்டர்




இணைய இணைப்பில் கணனிகளை பொருத்துவதற்கு பயன்படுத்தப்படும் துணைச்சாதனமான Router இல் தற்போது புதிய தொழில்நுட்பம் உட்புகுத்தப்பட்டுள்ளது.

அதாவது அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படக்கூடியதும், தொடுதிரைத் தொழில்நுட்பத்தினைக் கொண்டதுமான Soap எனப்படும் Router உருவாக்கப்பட்டுள்ளது.

இது பயனர்கள் பயன்படுத்துவதற்கு இலகுவாக காணப்படுவதுடன், வயர்லெஸ் தொழில்நுட்பத்தின் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய வசதியும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய மோ.சைக்கிள்



George Mabey என்ற மாணவர் ஒருவர் அலுமினியத்தால் செய்த மோட்டார் சைக்கிளின் மொத்த எடையே 5 கிலோதான்.

இந்த மோட்டார் சைக்கிளை தேவைப்படும் போது உபயோகித்துவிட்டு, அதன்பின்னர் அதை சுருட்டி கைப்பையில் வைத்துக்கொள்ளலாம். இதன் விலை $1680 ஆகும். மிக விரைவில் இந்த புதிய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு வரவுள்ளது.

லண்டன் London South Bank University என்ற பல்கலைக்கழகத்தில் காட்சிக்காகவும், டெமோ செய்து காட்டுவதற்காகவும் இந்த மோட்டார் சைக்கிள் தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## பீட்டா 2 விரைவில்



அப்பிள் நிறுவனம் சில தினங்களுக்கு முன்னர் மொபைல் சாதனங்களுக்கான தனது iOS 8 இயங்குதப் பதிப்பினை அறிமுகம் செய்திருந்தது. எனினும் அதில் காணப்பட்ட சில குறைபாடுகள் காரணமாகவும், மேலும் சில வசதிகளை உட்புகுத்தும் நோக்குடனும் iOS 8 இயங்குதளத்தின் பீட்டா பதிப்பினை அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளது.

இதில் விளம்பரங்களை தடை செய்யும் வசதி உட்பட விரைவாக தட்டச்சு செய்யக்கூடிய கீபோர்ட் அமைப்பு என்பன போன்ற மேலும் சில புதிய வசதிகள் உள்ளடக்கப்படவுள்ளன.

# விளையாட்டுப் பையன்


## ONE+ ஸ்மார்ட் போன்



ஸ்மார்ட் கைப்பேசி சந்தையில் One Plus One எனும் மற்றுமொரு கைப்பேசி இடம்பிடித்துள்ளது. இக் கைப்பேசியானது 5.5 அங்குல அளவுடைய HD IPS தொழில்நுட்பத்தினைக் கொண்ட தொடுதிரையினை உடைய இக்கைப்பேசியானது 2.5GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Quad Core Snapdragon 801 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, சேமிப்பு நினைவகமாக 16GB அல்லது 64 GB . கொள்ளளவுடையதாக காணப்படுகின்றது.

மேலும் 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கென 5 மெகாபிக்சல்களை உடைய கமெரா ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

## கணனியின் பீப் ஒலி



கணனியில் ஒலிக்கும் பீப் ஒலியின் எண்ணிக்கையை வைத்தே நாம் எதில் சிக்கல் இருக்கிறது என கண்டறியலாம்.

- 1- 2 - 3 முறை பீப் சத்தம்: ram அல்லது motherboard ல் பிரச்சனைகளைக் குறிக்கும்.
- 4 முறை பீப் சத்தம்: டைமரில் தோன்றும் பிரச்சனையை சரி செய்யும் விதமாக ஒலிக்கும்.
- 5 முறை பீப் சத்தம்: ப்ராசசரில் சிக்கல் இருப்பதைக் குறிக்கும்.
- 6 முறை பீப் சத்தம்: கீ போர்டு, கீ போர்டு கண்ட்ரோலில் தோன்றும் சிக்கலை குறிக்கும் விதமாக ஒலிக்கும்.
- 7 முறை பீப் சத்தம்: motherboard இல் உள்ள ஜம்பர்கள் சரியாக உள்ளாதா, இல்லை சரியாக வேலை செய்கிறதா என்பதை உணர்த்தும் விதமாக ஒலிக்கும்.
- 8 முறை பீப் சத்தம்: Display சம்பந்தமான பிரச்சனைகளை குறிக்கும் விதமாக அமையும்.
- 11 முறை பீப் சத்தம்: கேச் மெம்மரி சமந்தமான சிக்கல்கள் இந்த பீப் சத்ததின் மூலம் தெரிவிக்கப்படும்.
- 1 தொடர் பீப், மற்றும் 3 குறுகிய பீப்: மெமரி தொடர்பான பிரச்சனைகள் இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.
- 1 தொடர் பீப், மற்றும் 8 குறுகிய பீப்: Display இல் தோன்றும் பிரச்சனைகள் இந்த பீப் சத்ததின் மூலம் அறிந்து கொள்ளலாம்.
- 1 முறை குறுகிய பீப் சத்தம்: சாதாரணமான ஒலி மற்றும் உங்கள் கணனி நல்ல விதமாக வேளை செய்வதை குறிக்கும்.

இப்போது கணனியில் ஒலிக்கும் பீப் சத்ததை வைத்தே கணனியில் உள்ள குறைபாடுகளை தெரிந்து கொள்ளலாம்.

# ஒரு கொலையின் கதை

2-17

மாயன்

ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை....... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.

கடந்த மாதம் அளவில் ஒருவர் வந்து ஸ்கைப் வசதிகள் இருக்கின்றனவா என விசாரித்தார்...... அவரை நான் நிமிர்ந்து பார்த்த போது பழக்கப்பட்ட முகமாக இருந்தது.... அவர் அலிக....

(6)........................................

அவர் அலிக என்பதை நான் உடனடியாகத் தெரிந்துகொண்டேன். ஆனால் அவரால் என்னை அடையாளம் காணமுடியவில்லை என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். எம்மிடையேயான சம்பாசனை இப்படித் தொடர்ந்தது....

" அலிக அண்ணா தானே நீங்கள்?....."

" ஓம் நான் அலிக தான்....என்னை எப்படித் தெரியும் உமக்கு?...""

" நீங்கள் எனது பல்கலைக்கழக நண்பர் ஒருவருடன் என்னைச் சந்தித்திருக்கின்றீர்கள் ஞாபகம் இல்லையா?....

" ம்................." என அவர் சிந்திக்கும் போது நான் எனது பல்கலைக்கழக நண்பனின் பெயரைச் சொன்னேன்....... உடனடியாகவே அலிக் அதனை ஞாபகப் படுத்திக் கொண்டார்.

"ஓ...... ஞாபகம் இருக்கு ...ஐந்து வருடம் ஆகிவிட்டது... நீர் சரியா மாறிவிட்டீர்...... தம்பி" என்றார் அவர்...

அதன் பின்னர் அவருக்கும் எனக்கும் இடையிலான தொடர்பாடல்களில் அவர் என்னை தம்பியென்றே அழைத்து வந்தார்....

" ஏன் அலிக அண்ண இஞ்ச வந்து ஸ்கைப் வசதி இருக்கா எண்டு கேக்கிறீங்கள்"

" தம்பி... நான் என்னுடைய மச்சானின் அப்பாவின் மரண வீட்டிற்கு இஞ்ச வந்திருக்கிறன் ...மனிசி...பிள்ளைகளும் இஞ்ச வந்திருக்கினம்... நான் யுகெ ல இருந்து வந்திருக்கிறன்... அங்க இருக்கிற எண்ட முக்கியமாக பிரண்ட் ஓட கதைக்க வேணும்.. அதான் ஸ்கைப் வசதி தேடித் திரியிறன்"

" எங்களிட்ட அந்த வசதி இருக்கு அண்ணா... மேல்மாடியில இருக்கு... நீங்கள் எப்ப வேணும் எண்டாலும் வந்து பாவிக்கலாம்... நான் இஞ்சதானே இருக்கிறன்... அதால பிரச்சனையில்லை.... நீங்கள் வேண்டின நேரம் வரலாம் அண்ணா " என்று எமது சம்பாசனை மிகச் சுவாரசியமாகத் திரும்பியது .

அவர் தனது வெளிநாட்டுப் பயணம் தொடர்பாகவும் அங்கு நடந்தவைகளையும் சுவை கலந்த நகையுடன் தெரிவித்தார்...... நானும் எனது பங்காளியும் அந்தக் கணங்களைச் சுவைத்தோம்....

அன்றைய இரவு அலிக அண்ணா ஒரு விலையுயர்ந்த மதுப் போத்தலுடன் எம்மைச் சந்தித்தார். அன்றுதான் அவர் டொடியையும் சந்தித்தார்.

அன்றைய இரவில் நாங்கள் ஐவர் மதுக் க்ளிப்பைப் பகிர்ந்தோம்.. நான், அலிக அண்ணா, அவரது நண்பர், எனது மற்றொரு நண்பர், டொடி ஆகிய ஐவரும் அந்தக் களிப்பைப் பகிர்ந்தோம்...

அடிக்கடி அலிக இன்ரர்நெட் நிலையத்திற்கு ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தார்... போதையேறிய பின்னர் அலிக எமக்கு ஒரு விடயத்தை அவிழ்த்தார். அவர் ஸ்கைப்பில் பேசுவது தனது துண்டுடன் (இங்கிலாந்துக் காதலியுடன்) என்பதுதான் அது...........

நாம் அதைக் கேட்டதும் அவரை தொந்தரவு செய்வதில்லை என்ற முடிவை எடுத்தோம்.... அலிகவும் அவ்வப்போது வந்து எம்முடன் கலந்து கொள்வார்..... அற்றைய இரவு விடிந்தபோதும் நாம் மதுவருந்திக்கொண்டேயிருந்தோம்....

மது சிறிதுநேரம் தனது வாக்கு மூலத்தை நிறுத்தினார்...... அக்கணத்தில் புலனாய்வாளர் " அலிக ஸ்கைப் தொடர்பில் இருக்கும் போது நீஙகள் மேலே போக வில்லையா" என்ற கேள்வியைத் தொடுத்தார்...

"இல்லை நாம் நால்வரும் அங்கு செல்வதில்லை என்றும் அவருக்கு [illegible] என்றும் தீர்மானித்திருந்தோம்"

" சரி...... நீங்கள் ஐவரும் விடியும்வரை மது அருந்தினீர்கள்.... அதற்குப் பிறகு......"

அதற்குப் பிறகு அலிக தனது நண்பருடன் முச்சக்கர வண்டியில் அங்கிருந்து சென்று விட்டார்.

"அலிகவும்... டொடியும் எவ்வாறு அறிமுகமாயினர்" புலனாய்வாளரின் கேள்வி இடையில் விழுந்தது....

நான் அறிமுகப் படுத்தினேன்... அதன் பின்னர் நாங்கள் மிக நெருக்கமானவர்களாகவே உரையாடினோம்....

அதற்குப் பின்னர் அலிக அடுத்த ஐந்து நாட்கள் வரையிலும் இன்ரநெட் வசதிக்காக வரவில்லை.... ஆனால் திடீரென -நான் நினைக்கின்றேன் ஏப்ரல் மாதம் 8ம் திகதியாக இருக்கலாம்- அன்று அலிக வந்தார்.

அன்றும் அவர் விலையுயர்ந்த மதுபானச் சரக்குகளை தன்னுடன் வைத்திருந்தார். நான் உடனடியாகவே கடையைப் பூட்டிவிட்டு மதுக்களிப்பில் மூழ்க ஆயத்தமானேன்... அன்றும் பல புதியவர்கள் அந்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்டனர்..... விடிய... விடியத் தொடர்ந்த அந்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு விட்டு அதிகாலை நான்கு மணியளவில் எனது உந்துருளியில் வெளியே செல்ல எத்தனித்தபோது நான் கால் இடறி கழிவு நீர்க் கால்வாயில் பலமாக விழுந்தேன்... மயங்கினேன்.....

கண்விழித்த போது நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். கொழும்பு தேசிய வைதியசாலையின் விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த என்னை அதன் பின்னர் ஏப்ரல் மாதம் 11ம் திகதியே வெளியேற அனுமதித்தனர். அதன் பின்னர் நான் எனது வீட்டில் 28ம் திகதி வரை ஓய்வெடுத்து விட்டு கொமியுனிகேசனுக்கு அன்றைய தினம் வந்திருந்தேன்......

மது தனது வாக்குமூலத்தை அக்கணத்தில் நிறுத்தினார்..... அவருக்கு மெதுவாக வேர்க்கத் தொடங்கியதை புலனாய்வாளர்கள் அவதானித்தனர்... முக்கியமான விடயமொன்றை அவர் அதற்குப்பின்னரே வெளிப்படுத்தவுள்ளதை அவரது அசைவுகள் புலப்படுத்தியது.......

நான் 28ம் திகதி வந்த போது எனக்குத் தெரிந்த ஒருவர் பத்திரிகைக் கிழிசலொன்றை என்னிடம் தந்தார்.... அதிலிருந்த செய்தி.......... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல்

# பாதுகாப்பும் கண்காணிப்பும்



(வி.என்.சந்திரகாந்தி)

எமது வாழ்க்கையில் நாம் மன மகிழ்ச்சியுடன் இருப்பதற்கு அடிப்படையாக இருப்பவை, எம்மால் சம்பாதிக்கப்பட்ட பணம், விலைமதிப்பற்ற பொருட்கள் மற்றும் பாசமிகு உயிர்கள்.....!

எம்மிடமுள்ள மேற்படி வளங்களை இயன்றவரை மற்றவர்கள் அறியாமல் பேணி அனுபவிக்க முடியுமானால் பிரச்சனையே இருக்காது! ஆனால் அது எல்லா விடயங்களிலும் ஏற்புடையதாக இருக்கமாட்டாது. எமது கடின உழைப்பினால் கிட்டும் பணம்.... எமது முயற்சியினால் சேகரிக்கப்படும் விலை மதிப்பற்ற பொருட்கள்.... பண்பான அழகான மனைவி பிள்ளைகள்.... இவற்றை நாம் பிறர் அறியாமல் மறைக்க முடியாது...

அங்குதான் நாம் அவற்றிற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

பெறுமதி வாய்ந்த் எவற்றிற்கும் பாதுகாப்பு கொடுப்பதென்பது இலகுவான காரியமல்ல...!

பணம் என்று எடுத்தால் வங்கிகளே தம்மிடமுள்ள பணத்தை திருடர்களிடமிருந்தும் வாடிக்கையாளர்களிடமிருந்தும் காப்பாற்ற பல வழிகளில் செலவு செய்கின்றன...... கண்காணிப்பு 'கமரா'..... பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்.... பாதுகாப்பு பெட்டகங்கள்..... இப்படி பற்பல.....

அண்மையில் வாடிக்கையாளர்களின் வசதி கருதி வங்கிகள் பரவலாக தன்னியக்க வங்கி (ஏ.ரீ.எம்) இயந்திரங்களை அறிமுகம் செய்துள்ளன. வாடிக்கையாளர்களை இனம் காட்டக்கூடிய இலத்திரனியல் அட்டைகளை பயன்படுத்தி இந்த சாதனத்தில் இலகுவாக பணம் பெற முடியும்.

திருடர்கள் சும்மாவா இருப்பார்கள்... அந்த சாதனத்தை உடைத்து பணத்தை சூறையாடல்..... சாதனத்தை 'பற்ரறி' யால் இயக்கக்கூடிய குண்டால் தகர்த்து பணம் பெற முயற்சித்தல்..... முடிந்தால் சாதனத்தையே தூக்கிச் செல்லல்!

இதற்கும் மேலாக சர்வதேச ரீதியிலான கடனட்டை மோசடி!

அடுத்து நகை போன்ற பெறுமதிமிக்க பொருட்களை காட்சியறையில் வைப்பதில் கடை உரிமையாளர்கள் பெரும் பாதுகாப்பு பிரச்சனையை எதிர் கொள்கின்றனர். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் திருடர்கள் கடைகளை சூறையாடுகின்றனர். வங்கிகள் வாடிக்கையாளர் களுக்கு பாதுகாப்பு பெட்டகங்களை வாடகைக்கு விடுகின்றன..

இன்று பாடசாலைகளிலும், தொழில் பார்க்கும் இடங்களிலும், பயணங்களின் போதும், தனிமையிலும் பெண்களும் சிறுவர்களும் பல வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். குடும்ப கஷ்டம் நிமித்தம் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பு தேடி போகும் பெண்கள் நூற்றுக்கணக்கில் கர்ப்பிணிகளாக சொந்த நாட்டுக்கு திரும்பும் நிலை காணப்படுகின்றது.

ஏன் இந்த பாதுகாப்பற்ற நிலைமைகள்?

'பொலிஸ்' பிரிவு என்ன செய்கின்றது? ஏன் அவர்களால் குற்றங்களை தடுக்கவும் குற்றவாளிகளை கைது செய்யவும் முடியவில்லை? சட்டம் என்ன செய்கின்றது? நீதி மன்றங்கள் ஏன் குற்றச் செயல்கள் மீண்டும் மீண்டும் எழுவதனை தடுக்கும் வண்ணம் உரிய தண்டனைகளை வழங்கவில்லை? ஒவ்வொரு நாட்டினதும் அரசாங்கங்கள் ஏன் பேசாமௌனியாக் வாய் பொத்தி நிற்கின்றன?

நிறுவனமயமான தும் சர்வதேச ரீதியிலானதுமான மேற்படி பிரச்சனைகளை விடுத்து நாம் இப்போ குடும்ப மட்டத்தில் இப் பிரச்சனைகளுக்கான தீர்வை ஆராய்வோம்.

ஒரு குடும்பத்தின் பாதுகாப்புக் கவசமே கணவனதும் மனைவியினதும் தாய்
தந்தையர், பாட்டன் பாட்டி மேலும் உறவினரான வயோதிபர்கள். அவர்களது பெருமை தெரியாமல் அவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி வைப்பது போன்ற மூடத்தனம் எதுவுமே இல்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

நாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை அவர்களால் தான் சேமிக்க முடியும். வயோதிப காலத்தில் அவர்களுக்கு செலவுதான் ஏது? மேலும் அவர்களது துணை இருந்தால் கணவன் மனைவி இருவருமே தொழிலுக்கு செல்லலாம். அது மட்டுமன்றி மேலதிக நேரம் பணியாற்றுவதன் மூலம் அதிக பணம் சம்பாதிக்கலாம்.

சேமிக்கும் பணத்தை விரயமில்லாமல் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரக்குழந்தைகளுக்கும் அவசியமான பெறுமதிமிக்க நகைகளை செய்யவும் அவசியமான வீட்டு தளபாடங்களையும் நில புலன்களையும் வாங்கி சொத்துகளை பராமரிக்கவும் அவர்களால் முடிகின்றது.

குடும்பத்தின் குல விளக்குகளான எமது மனைவி பிள்ளைகள் அன்னியரிடம் உதவி பெறும் நிலை ஏற்படும் போதுதான் பல தவறுகள் ஏற்படுகின்றன. கணவனானவன் தனது குடும்பத்தின் அனைத்து தேவைகளையும் தானே நிறைவேற்றுதல் வேண்டும். அசட்டை காரணமாகவோ..... குடி போன்ற போதை வஸ்துக்களுக்கு அடிமையாகுதல் காரணமாகவோ மனைவி பிள்ளைகளை பிறர் எவரிடமாவது கையேந்த விட்டால் அங்கு பலவிதமான தவறுகளும் ஏற்ப்டும் என்பது திண்ணம்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் எமது சொத்துக்களுக்கும் மனைவி பிள்ளைகளுக்கும் பாதுகாப்பாக மட்டுமன்றி கண்காணிப்பாளர்களாகவும் இருக்க கூடியவர்கள் எமது வயோதிப பெற்றோர்களே! அவர்களை என்றென்றும் பேணுவோமாக!

எனது தூரத்து உறவினர் ஒருவர், அயலவரிடம் தனது மனைவியையும் ஒரு பெண் குழந்தையையும் கவனிக்கும்படி பொறுப்புக் கொடுத்துவிட்டு உழைப்பிற்காக அரபு நாடொன்றுக்கு சென்றார். பத்து வருடங்கள் கஷ்டப்பட்டு உழைத்து மாதாந்தம் மனைவியின் வங்கி கணக்குக்கு பணத்தை அனுப்பிக் கொண்டிருந்தார். மனைவியும் தொலைபேசியில் அன்புடனும் பரிவுடனும் உரையாடி வந்தாள்...... இதுவரை சம்பாதித்தது போதும் என்று எண்ணி அவர் ஊர் திரும்பி வந்து மனைவி பிள்ளைகளை தேடிய போது அவர்கள் சில தினங்கள் முன்னரே வீடு மாறி சென்று விட்டதாக அயலவர்கள் தெரிவித்தார்கள்.....

# தேசிய SMS செய்திகள்

- **இரணைமடு பொதுச்சந்தை நாளை திறப்பு**

கிளிநொச்சி இரணைமடு பொதுச்சந்தை த்தொகுதி கட்டப்பட்டு பல ஆண்டுகள் கடந்தபின்பு நாளை திறந்து வைப்பதற்கான முயற்சியில் கரைச்சி பிரதேசசபை ஈடுபட்டுள்ளது.

- **நுவரெலியாவில் கடும் காலநிலை சீர்கேடு**

நுவரெலியா மாவட்டத்தின் அநேகமான பகுதிகளில் கடும் காற்று வீசுவதாக மாவட்ட செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

- **பாரிய நட்டம்.**

பெற்றோல் லீற்றரொன்றுக்கு ரூபா 1.62 ஐ இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமாகப் பெற்று வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

- **ஜனாதிபதிக்கு மகஜர்**

பொது பல சேனா அமைப்பைத் தடை செய்யக்கோரியும் சமீபத்திய கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கக் கோரியும் அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா ஏறாவூர்க் கிளையினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- **l கோடி பெறுமதியான வலைகள் எரிப்பு**

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்திற்கு வருகை தந்த மீனவர்கள் இன்றில் இருந்து தங்கூசி வலைகளைப் பயன்படுத்த மாட்டோம் என கையெழுத்து இடப்பட்ட கடிதம் ஒன்றினை கையளித்ததுடன் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் முன்பாக வைத்து தங்கூசி வலைகளை எரித்துள்ளனர்.

- **க.பொ.த சா/த பரீட்சை விண்ணப்பங்கள்**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடையவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

- **டிக்கோயா ஆற்றை அகலமாக்க நடவடிக்கை**

-காசல்ரீ நீர்தேக்கத்திற்கு ஹட்டன் பகுதியிலிருந்து நீர் செல்லும் ஹட்டன் ஆற்றை அகலமாக்குவதற்கு தோட்ட நிர்வாகம் முன்வந்துள்ளது.

- **சமூக நல்லிணக்கம் கருதி முஸ்லிம் பெண்ணை திருமணம் செய்வேன்.**

சமூக நல்லிணக்கம் கருதி தனது மனைவி பிள்ளைகள் எதிர்ப்பு தெரிவித்தாலும் முஸ்லிம் பெண் ஒருவரை திருமணம் செய்ய தான் தயாராக இருப்பதாக அமைச்சர் மேவின் சில்வா தெரிவித்துள்ளார்.

- **பக்கவாத நோயாளி தூக்கில்**

அனுராதபுரத்திலுள்ள ஓர் பிரதேசத்தில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

# குறுக்கெழுத்து புதிர் 014

***விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :***
***மலைமுரசு. இல - 159ஏ,***
***கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.

முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

**போட்டி முடிவுத் திகதி : 26.06.2014**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 தி | | 17 | | 18 | 4 | | ■ |
| 3 | | | | 19 | | 20 | ■ | ■ |
| 5 | | | 21 | | 6 | | | |
| | ■ | 7 | | 8 | | | | |
| | 9 | 22 | | 16 | | | 24 | 23 |
| 10 | லை | | ■ | 11 | | | | |
| | ■ | 12 | | வு | | | | |
| 13 | | | | | | | | |
| 14 | | 15 | | | | ■ | ■ | யு |

## இடமிருந்து வலமாக

1. தலைவனைக் குறிக்கும் ஒரு சொல்.
2. மலைமுரசு பத்திரிகை வெளியாகும் மாவட்டம்.
3. உள்ளதை உள்ளபடி காட்டக் கூடியதாயினும் இதன் முன்னே செல்ல வேண்டும்.
4. இரண்டெழுத்தைக் கொண்ட தற்போது நடிப்பிலீடுபடாத நடிகை
5. தமிழில் இன்டர்நெற்றைக் குறிப்பது.
6. இது இருந்தால் கணவன், மனைவிக்கிடையில் எப்போதும் பிரிவு உண்டாகாது.
7. செய்யும் தொழில் எதுவாயினும் அது ஓர் ..... யேயாகும். - திரும்பியுள்ளது.
8. தீர்க்கப்படாத கோபம்
9. கண்ணன் அவதரித்த வடமதுரை.
10. கல்லை உளி கொண்டு உடைத்தெடுப்பது.
11. சிறந்த ஓர் உடற்பயிற்சி
12. அதிகமாக சின்னத்திரையில் மாமி வேடம் போடும் நாயகி.
13. ஆண் பெயர் கொண்ட நதி
14. 24 நிமிடங்களைக் கொண்டது.
15. சிவனுக்குப் பிடித்த இடம்.
16. நாடு செழிக்க இவர்களின் ஒத்துழைப்பும் அவசியம் தேவை. - திரும்பியுள்ளது.

## மேலிருந்து கீழாக

5. பூ போல வராவிட்டால் இதனை மண்டையை உடைக்கத்தான் பாவிக்கலாம்.
7. தொலை த்தலின் பேச்சுத் தமிழ் - மேலிருந்து கீழாக
10. சிலையை வடிவமைப்பவன்.
17. சூர்யாவின் நீங்களும் வெல்லலாம் ஒரு ..........
18. ஜீன்களால் சுமக்கப்படுவது, புதுக்கவிதைகளில் மீறப்படுவது.
19. எதிரியின் ஒத்த சொல்.
20. இலங்கையின் தேசிய உணவு.
21. பாவம், ............., தாளம் சரியாக சேருவதே இனிமையானது - கீழிருந்து மேலாக.
22. வடக்கிலும் தெற்கிலும் உண்டு. கிழக்கிலும், மேற்கிலும் இல்லை.
23. கர்ப்பத்தில் இருக்கும் போதே சக்கர வியூகத்தை உடைக்கக் கற்றுக் கொண்டவன்.
24. தூரத்தை அளக்க அலகில் ஒன்றாகும்.

## குறுக்கெழுத்து புதிர் 013 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஏ | 5 மா | ற் | ற | ம் | ■ | 2 மோ | து | ■ |
| 3 க | டி | ■ | ■ | 17 க | 24 தை | ப் | 20 சி | ■ |
| லை | வீ | 4 ப | ர | ண் | ய | ப | 11 பா | ல் |
| வ | டு | 6 ம | ண் | ணே | ல் | ம் | ரி | ■ |
| 9 ன் | ர | 19 தி | த் | மி | 21 ச | தே | சு | ■ |
| 16 தா | 23 வி | ர | 12 ம | து | 13 மா | து | ளை | 18 அ |
| ■ | டு | பா | ய | ■ | ளி | 10 ர | ண | ம் |
| 15 செ | வி | டு | க் | 14 ப | த் | 22 தி | ■ | பு |
| 7 நெ | ரு | க் | க | ம் | ■ | ரை | 8 கி | லி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

01. இலங்கையில் உயரமான இடத்தையும், தாழ்வான இடத்தையும் காட்ட பயன்படுத்தும் நியம நிறங்கள் எவை?
1. நீலம், கபிலம் 2. கபிலம், பச்சை 3. சிவப்பு, மஞ்சள் 4. பச்சை, கபிலம்

02. துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்ய முன்பு மிகவும் கவனிக்கப்பட வேண்டிய துவிச்சக்கர வண்டியின் பகுதி எது?
1. முன்பக்கச் சில்லுத் தடை 2. பின்பக்கச் சில்லுத் தடை 3. மணியடிக்க தயாராக இருத்தல் 4. ஆசனம்

03. தேசப்படத்தில் புகையிரதப் பாதையைக் குறிக்க பயன்படுத்தப்படும் நிறம்?
1. கறுப்பு 2. சிவப்பு 3. கபிலம் 4. நீலம்

04. ஆதிவாசிகளின் புனித நூல் எது?
1. யாக்பெல் 2. விவிலியம் 3. கீதை 4. உபநிடதம்

05. இலங்கையில் முதன் முதலாக அமைக்கப்பட்ட குளம்?
1. திசா வாவி 2. கிரித்தலைக் குளம் 3. பசவக்குளம் 4. வவுனிக்குளம்

06. தொல்பொருள் பெறுமதிமிக்கதாகவும், கலைத்துவ பெறுமதிமிக்கதாகவும் உள்ள இடம் எது?
1. எம்பிலிப்பிட்டிய 2. சிகிரியா 3. கீதை 4. உபநிடதம்

07. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
1. வலைப்பந்து 2. எல்லே 3. வொலிபோல் 4. மென்பந்து

08. நெத்தலிக் கருவாட்டை உண்பதால் உடலுக்கு கிடைக்கும் போசணைப் பொருள் எது?
1. புரதம் 2. கொழுப்பு 3. விற்றமின் ஏ 4. கல்சியம்

09. கண்டமாலை நோய்க்கு பிரதான காரணம் எது?
1. அயடீன் குறைபாடு 2. இரும்புச் சத்துக் குறைபாடு 3. விற்றமின் குறைபாடு 4. கல்சியம் குறைபாடு

10. முகம் பார்க்கும் கண்ணாடியை சுத்தமாக்கப் பயன்படுத்தும் பொருள் எது?
1. தேயிலைச் சக்கை 2. தேங்காய்ப்பூ 3. விம்சோப் 4. பழப்புளி

11. மிகமிக உயரமான இடங்களில் கூடுகளை அமைத்து, முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் பிராணி பின்வருவனவற்றுள் எது?
1. கழுகு 2. முதலை 3. வெளவால் 4. மைனா

12. இரவில் திரியும் பறவையாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
1. கோட்டான் 2. சாக்குருவி 3. மீன்கொத்தி 4. ஆந்தை

13. இலங்கையில் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் எது?
1. பின்னவல 2. வில்பத்து 3. குமண 4. யால

14. மரங்களில் காணப்படும் இயற்கையான பொந்துகளில் வாழும் பிராணி எது?
1. பாம்பு 2. காகம் 3. அணில் 4. கிளி

15. கனவுரு ஒன்றிலுள்ள செங்கோணங்கள் எத்தனை?
1. 04 2. 20 3. 24 4. 15

16. இலங்கை நாயணத்தாள்களில் பெறுமதி கூடிய நாணயத்தாள் எது?
1. ரூ 500 2. ரூ 5000 3. ரூ 10000 4. ரூ 2000

17. நீர்த்தாங்கி யொன்றை நிரப்புவதற்கு ஒரு நிமிடத்தில் 25லீ நீரை நிரப்பும் குழாயையும், இரண்டு நிமிடத்தில் 60லீ நீரை நிரப்பும் குழாயையும் பொருத்தியுள்ளான். இரு குழாய்களையும் ஒரே நேரத்தில் திறந்து விட்டால், 10 நிமிட நேரத்தில் எவ்வளவு நீரை நிரப்பும்?
1. 850 லீ 2. 550 லீ 3. 500 லீ 4. 580லீ

18. பச்சை நிறப் பின்னணியில் யானையும், யானைப்பாகனும் உள்ள நாணயத்தாள் எது? 1. ரூ 10 2. ரூ 500 3. ரூ 1000 4. ரூ 2000

19. 416 தோடம்பழங்கள் நான்கு பெட்டியில் சமமாக அடைக்கப்பட்டது எனில், ஒரு பெட்டியிலுள்ள தோடம்பழங்கள் எத்தனை?
1. 14 2. 114 3. 104 4. 144

20. ஒரு மீற்றர் கம்பியை வாங்குவதற்கு ரூ 40 தேவை. 4மீற்றர் 25 சென்றிமீற்றர் கம்பியை வாங்க எவ்வளவு பணம் தேவை?
1. ரூ 160 2. ரூ 170 3. ரூ 185 4. ரூ 180

21. ஒரு வரிசையில் ரவிக்கு முன்னால் 9 மாணவர்கள் நின்றனர். அனைவரும் மறுபக்கம் திரும்பி நினற போது, ரவிக்கு முன்னால் 2 மாணவர்கள் நின்றனர் எனில், வரிசையிலுள்ள மாணவர்கள் தொகை எத்தனை?
1. 11 2. 12 3. 13 2. 10

22. ஒரு கிலோகிராம் வாழைப்பழத்தின் விலை ரூபா 80 ஆகம். 2350 கிராம் வாழைப்பழத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?
1. ரூ 180 2. ரூ 188 3. ரூ 189 4. ரூ 108



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



## யோசித்து செயல்படல்

குட்டிக் கதை



ஊருக்கு ஒதுக்குப் புறமாக ஒரு கொடிய வி'முள்ள பாம்பு வாழ்ந்து வந்தது. ஊர் மக்கள் யாராவது அதன் புற்றின் பக்கம் போனால் சீறி வந்து கொத்தி விடும். பாம்புப் புற்று இருந்த பாதை அந்த ஊருக்கும் பக்கத்து சந்தைக்கும் குறுக்கு வழி. பாம்புக்கு பயந்தே ஊர் மக்கள் பல தொலைவு சுற்றி அந்த சந்தைக்குப் போய் வந்து கொண்டிருந்தார்கள். வேறு வழியில்லாததால் சலிப்புடனேயே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு யோகி வந்தார். அவர் மிருகங்களிடம் பேசக் கூடிய வரம் பெற்றவர். ஊர் மக்கள் தங்கள் குறையை அவரிடம் முறையிட்டனர். அவர் பாம்பிடம் பேசி அதற்கு ஊர் மக்களை கடிக்கக் கூடாது என்று கட்டளை இட்டு விட்டு பக்கத்து ஊருக்குச் சென்று விட்டார். பாம்பும் அவர் கட்டளைக்குக் கட்டுப் பட்டு நடந்தது.

ஆனால் ஊர் மக்கள் சும்மாயில்லை. வழியே போகும் சிறுவனுக்குக் கூட பாம்பிடம் இருந்த பயம் போய் விட்டது. பாம்பைக் கண்டால் அதைக் கல்லால் அடிப்பது, துன்புறுத்துவது, விரட்டியடிப்பது என்று அதன் வாழ்க்கையை நிம்மதியில்லாமல் செய்து கொண்டிருந்தனர். உடம்பில் பல காயங்களுடன் குற்றுயிரும் குலையுயிருமாகி விட்டது பாம்பு.

யோகி ஒரு நாள் பாம்புப் புற்று இருந்த வழியாக ஊருக்குள் திரும்ப வரும் போது பாம்பின் பரிதாபமான நிலையைக் கண்டு அதனை விசாரித்தார். பாம்பும் நடந்த கதையையெல்லாம் கூறி அழுதது.

யோகி பாம்பைப் பார்த்து "அட முட்டாள் பாம்பே! உன்னை மக்களைக் கடிக்கவேண்டாம் என்றுதானே கூறிச் சென்றேன். பக்கத்தில் வருபவனைப் பார்த்து சீறாதே என்று ஒரு போதும் சொல்லவில்லையே" என்று கேட்டார். இதற்குப் பின் பாம்பும் பிழைத்துக் கொண்டது.

- தரப்படும் அறிவுரைகளை ஆராய்ந்து செயற்படுத்த வேண்டும். -

## வாழ்வதோ!!

இன்று வெள்ளிக்கிழமையாம்,
இறைச்சிக் கறியாம் 'சோயா' வாம்!
நன்று பொன்னாங் காணியாம்,
நல்ல மல்லித் 'தண்ணி' யாம்!

ஆடு மாடு கோழியோ,
அந் நண்டிறால் மட்டியோ,
தேடு சூட்டிறைச்சியோ,
செத்தல் மீனோ இல்லையாம்!



தங்கை தம்பி மார்களே,
சாப்பிடுவோம் வாருமே!
எங்கள் சைவ நெறிக்கிது
ஏற்ற சாப்பாடல்லவோ?

வெள்ளி, மட்டும் சைவமோ?
வேறு நாள் அசைவமோ?
உள்ளம் ஒப்புக் கொள்ளுமோ?
உலகம் பழிக்க வாழ்வதோ?

## சிந்திக்க .. ..

குறை இல்லாதவன் மனிதன் இல்லை,
அதை குறைக்கத் தெரியாதவன்
மனிதனே இல்லை!!.

## குழந்தைகளின் உடல் ஆரோக்கியம்

**உடல் பருமன்**

முதன்முதலில் குழந்தையின் அளவுக்கதிகமான உடல் எடை கணக்கெடுப்பின் போது உணவுப் பழக்க வழக்கங்கள், குடும்ப பழக்கவழக்கங்கள் ஆகியவை கருத்தில் கொள்ளப்படுகிறது. ஏனெனில் வெற்றிகரமான மருத்துவ முறைகளுக்கு இந்தப் பழக்கவழக்கங்களில் ஏற்படும் மாற்றங்களும் காரணங்கள்.



குழந்தையின் வளர்ச்சி பதிவேடு, உடல் பரிசோதனை மற்றும் பிறபரிசோதனை கணக்கில் கொள்ளப்படுகிறது. இது தவிர ஹார்மோன்கள் மற்றும் மரபணு சோதனைகளும் மேற்கொள்ளப்படுகிறது.

எடையை குறைப்பதை விட எடையை பராமரித்தல் முதல் லட்சியம். எடை குறைவு மிக மெதுவான செயலாக இருக்க வேண்டும். எடை குறைப்பு குறைந்தது 6 மாத காலம் பராமரிக்கப்பட வேண்டும். வெற்றிகரமான எடைகுறைப்பு மற்றும் எடை பராமரிப்புக்கு முக்கியமான வாழ்வு முறை மாற்றம், அதிகப் படியான உடல் உழைப்பு மற்றும் உணவு, உடற் பயிற்சி, செய்முறை மாற்றங்கள், மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் பரிந்துரைக்கப்படுகிறது.



செய்முறை மாற்றங்கள் எடுத்துக்காட்டாக உடல் உழைப்பில்லாத வேலையை குறைத்தல், உடல் உழைப்பை அதிகரித்தல், ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கத்தை கைவிடுதல், குடும்பத்தினரிடையே கலந்துரையாடலை அதிகரித்தல் போன்றவற்றை செய்தாலே உடல் எடை குறையத் தொடங்கும்..

முற்றும்..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01.
அ. கூட்டல் விருத்தி ஒன்றின் ஆறாம் உறுப்பு 9உம் ஒன்பதாம் உறுப்பு 15உம் ஆகும். இவ்விருத்தியின்,

1. முதலுறுப்பு, பொது வித்தியாசம் என்பவற்றைக் காண்க.

2. nஆம் உறுப்புக்கான கோவையைத் தருக.

3. முதல் 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

4. 108 இத்தொடரின் ஓர் உறுப்பாகுமா?

ஆ. 3a இற்கும் 8b-a இற்கும் இடையில் மூன்று கூட்டல் இடைகளைக் காண்க.

02. பை ஒன்றினுள் வடிவத்தில் ஒத்த 6 சிவப்பு பந்துகளும், 2 நீல பந்துகளும் உள்ளன. மாணவன் ஒருவன் முதலில் எழுமாறாக ஒரு பந்தை எடுத்து அதன் நிறத்தைக் குறித்துக் கொண்டான். பின்னர் அப் பந்தை பையினுள் இடாமல் இரண்டாவது தடவையாக வேறொரு பந்தை எடுக்கின்றான்.

1. மேற்குறித்த நிகழ்ச்சியின் மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.

2. இரண்டாவதாக எடுக்கப்படும் பந்து சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

3. இரு தடவைகளிலும் எடுக்கப்பட்ட பந்துகளில் ஒன்று சிவப்பாகவும் மற்றையது நீலமாகவும் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

03. நபர் ஒருவர் ரூபா 80000 ற்கு கொள்வனவு செய்த குளிர்சாதனப் பெட்டி ஒன்றை 35வீத இலாபத்தில் விலை குறித்து பின்னர் 15வீத கழிவில் விற்கின்றார்.

1. குளிர் சாதனப் பெட்டியின் குறித்த விலை யாது?

2. குளிர் சாதனப் பெட்டியின் விற்ற விலை யாது?

3. விற்றுப் பெற்ற பணத்தை 12வீத எளியவட்டி வழங்கும் நிறுவனம் ஒன்றில் 2 வருடங்களுக்கு வைப்பிலிடுவதினால் பெறப்படும் வட்டிப் பணம் எவ்வளவு?

4. அப்பணத்தை 10 கூட்டு வட்டி வழங்கும் வங்கியில் 2 வருடங்களுக்கு வைப்பிலிட்டால் பெறப்படும் கூட்டுவட்டி எவ்வளவு?
எது இலாபகரமானது என அவருக்கு அறிவுரை வழங்குக.

.04. 0.8m விட்டமும் 1cm உயரமும் உடைய உருளை வடிவ நீர்த்தாங்கி ஒன்றின்
அ. உருளையின் அடி வட்டத்தின் ஆரை யாது?
ஆ. வட்டக் குறுக்கு வெட்டுத் தோற்றத்தின் பரப்பளவு யாது?
இ. தாங்கியின் கொள்ளளவை ml இல் தருக.
ஈ. 7cm, 14cm விட்டமுடைய என்னும் இரு நீர்ப்பம்பிகள் முறையே 20, 5 வேகங்களில் தாங்கியினுள் நீரைப் பாய்ச்சுகின்றது. தாங்கியை முற்றாக நீரால் நிரப்புவதற்கு எடுக்கும் நேரத்தைக் காண்க.

**கணிதம் வழிகாட்டல் :**

**திருமலையின் பிரபல ஆசிரியர்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

1. இயக்கு நரம்பின் தொழில்
   1. தெறிப்பு வில்லில் மாத்திரம் பங்குபற்றல்
   2. மூளையிலிருந்து முண்ணானுக்கு மாத்திரம் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
   3. மைய நரம்புத் தொகுதியிலிருந்து தசைகளுக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
   4. புலனங்கங்களிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்

2. பயிரிடும் பணிகளில் பல்வேறு தொழில்களுக்காக தாவர ஓமோன்களைப் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பிரயோகிக்கலாம். எனினும் தாவர ஓமோன்கள் நிறைவேற்ற முடியாத ஒரு தொழில்
   1. சிறு கிளையை வேர்விடச் செய்தல்
   2. களைகொள்ளியாகச் செயற்படச் செய்தல்
   3. பருவமல்லாத போது பூக்களும் காய்களும் உண்டாகச் செய்தல்.
   4. பீடைகொல்லியாகச் செயற்படச் செய்தல்

3. பின்வரும் எந்த அங்கிகள் அழுகல் தாவரம் எனப்படும்?
   1. தமது உணவை தாமே உற்பத்தி செய்யும் அங்கிகள்
   2. வேறு அங்கிகளை உணவாகக் கொள்ளும் அங்கிகள்
   3. இறந்த விலங்குப் பகுதிகளையும், தாவரப் பகுதிகளையும் சார்ந்திருக்கும் அங்கிகள்
   4. பச்சைத் தாவரங்களை மாத்திரம் உணவாகக் கொள்ளும் அங்கிகள்

4. பிரிமென்றகடு என்பது வயிற்றுக் குழியில் இருந்து நெஞ்சறைக் குழியை வேறுபடுத்தும் தசை சுவராகும். இதன் பிரதானமான தொழில் யாது?
   1. நெஞ்சறையில் உள்ள அங்கங்களும், வயிற்றில் உள்ள அங்கங்களும் தொடுகையுறுவதைத் தடுத்தல்
   2. உட்சுவாசத்திற்கும், வெளிச்சுவாசத்திற்கும் உதவுதல்
   3. வயிறு வெளியே தள்ளப்பட்டிருப்பதைத் தடுத்தல்
   4. நுரையீரல்கள், இதயம் போன்ற அங்கங்களை தாங்கியிருத்தல்

5. மூன்று விசைகளின் நாப்பத்தின் (சமநிலை) மூலம் பின்வரும் எச்சந்தர்ப்பத்தை விளக்கலாம்?
   1. விற்றராசில் தொங்கவிடப்பட்டுள்ள ஒரு பொருளின் சமநிலை
   2. நீரில் மிதக்கும் ஒரு பொருளின் சமநிலை
   3. நிறைகள் (படிக்கற்கள்) இடப்படும் ஒரு சாதாரணத் தராசின் சமநிலை
   4. மேசையில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு புத்தகத்தின் சமநிலை

6. மண்ணீர் வேர்மயிரிலிருந்து தாவரகாழ் கலன் வரை கடத்தப்படும் பாதையை சரியாக குறிப்பது?
   1. மேற்றோல் அகத்தோல் பரிவட்ட உறை மேற்பட்டை காழ்
   2. மேற்றோல் மேற்பட்டை அகத்தோல் பரிவட்டஉறை காழ்
   3. மேற்றோல் மேற்பட்டை பரிவட்ட உறை அகத்தோல் காழ்
   4. மேற்றோல் பரிவட்ட உறை மேற்பட்டை அகத்தோல் காழ்

7. காச நோய் காரணி பற்றீரியாவான பசிலிஸ் ரியூபளோசிஸ் என்ற நுண்ணங்கி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
   1. வில்லியம் கார்வே 2. ரொபர்ட் கொக்
   3. அலெர்சாண்டர் பிளமிங் 4. கிரகர் மெண்டல்

8. சுவாசப்பை சிற்றறைகளில் வாயுப்பரிமாற்றம் நிகழ போதிய சுவாசம் கிடைப்பதற்கு குருதிகலங்கள் எவ்வாறு சிறப்படைந்துள்ளது?
   1. செங்குழியங்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது.
   2. வெண்குழியங்களின் எண்ணிக்கை அததிகமாக காணப்பட்டது
   3. செங்குழியங்களின் விட்டம் குருதி மயிர்த்துளைக்குழாயின் விட்டத்திலும் அதிகமாக காணப்பட்டது.
   4. செங்குருதி கலங்கள் மயிர்துளை குழாயிகளினூடாக விரைவாக செல்லக் கூடியதாக இருந்தது.

9. காரியம், வைரம் ஆகிய காபன்கள்
   1. சமதானிகளாகும் 2. பிறதிருப்ப வடிவங்களாகும்
   3. சேர்வைகளாகும் 4.. வேறுபட்ட பௌதீக நிலைகளாகும்

## பாடம் : வரலாறு

01. இலங்கையின் வரலாற்றை பற்றி அறிவதற்கு உள்நாட்டு வெளிநாட்டு மூலாதாரங்கள் எமக்கு பெரும் துணை புரிகின்றன.
   1. இலங்கையின் வரலாற்று அறிய உதவும் வெளிநாட்டு மூலாதாரங்களை எழுதியோரை அ, ஆ, இ ஒழுங்கில் குறிப்பிடுக.
      அ - நெச்சுரலில் ஹிஸ்ரோறியா ஆ - இந்திக்கா
      இ - புவியியல் சாஸ்திர பிரவேசம்
      (மெகஸ்தனிஸ் , பிளினி, கொஸ்மஸ் , தொலமி , பாகியன்)
   2. நாணய மூலாதாரங்கள் வெளிப்படுத்தும் அம்சங்கள் இரண்டை குறிப்பிடுக.
   3. இலங்கையில் துட்டகைமுனுவின் ஆட்சிக்கால முக்கியத்துவத்தை இரு காரணிகள் ஊடாக விளக்குக.
   4. இலங்கையில் நீண்ட காலம் நிலைத்திருந்த அனுராதபுர இராசதானி வீழ்ச்சி அடைய காரணமாக அமைந்த விடயங்கள் மூன்றை விளக்குக.

பகுதி 01

01. 1. மல்வத்து ஓயா — அ. உருவெலகம
2. கலா ஓயா — ஆ அனுராதகம
3. கிரிந்தி ஓயா — இ மகாகம
4. மாணிக்க கங்கை — ஈ கஜரகம

நதிக்கரைகளில் தோற்றம் பெற்ற குடியேற்றங்களின் ஒழுங்கு
1. அஆஇஈ 2. ஆஇஅஈ 3. ஆஅஇஈ 4. இஆஅஈ

02. ஆரியர் இந்தியாவில் குடியேறிய முதல் பிரதேசம்
1. சப்தசிந்து 2. கங்கைச்சமவெளி 3. விந்திய மலைத் தொடர்
4. இமாலயம்

03. ஆரியரின் சமூக அமைப்பில் சத்திரியரால் ஆற்றப்பட்ட பணிகளுள் பொருத்தமற்றது
1. நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்தல்
2. அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டு மக்களை பாதுகாத்தல்
3. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
4. கல்வி கற்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபடல்

04. இலங்கையில் அமைக்கப்பட்ட மிகப் பெரிய தூபி
1. ருவன்வெலிசாய 2. மிரிஸவட்டிய 3. அபயகிரி 4. ஜேத்தவனராமய

05. கலிங்க மாகனிடமிருந்து பாதுகாப்புப் பெற பிரதேச ஆட்சியாளரான சங்க என்பவனால் அமைக்கப்பட்ட நிலையம்
1.மினிப்பே 2.கோவிந்தமல 3.யாப்பகூவ 4.தம்பதெனியா

06. குருணாகல் இராசதானி காலத்தில் வாழ்ந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்கக் கூடிய விடயம்
அ பாண்டிய ஆரியச் சக்கரவத்தி புனித தந்ததாசவை அபகரித்துச்செல்லல்
ஆ ராஜபுத்திர வீரர்களின் உதவியுடன் புவனேகபாகு ஆட்சி அமைத்தல்
இ நிஸ்ஸங்க அழக கோணாரால் கோட்டை அமைத்தல்
ஈ அம்புலுகல குமாரயா ஜோதிய இளவரசனின் கிளர்ச்சியை அடக்குதல்
1. அ, இ 2. அ, ஆ 3. அ, ஈ 4. ஈ, இ

07. பின்வருவனவற்றுள் முதல் தேசிய அரசு
1. ஸ்பானியா 2. போர்த்துக்கல் 3. இங்கிலாந்து 4. ஒல்லாந்து

08. ஆம் உலகமகாயுத்த காலத்தில் மத்திய ஐரோப்பிய நாடுகளின் நட்பு கூட்டு அணியில் இணைந்து கொண்டு பின் பிரிந்து சென்று முக்கூட்டு நட்பு அணியில் இணைந்து கொண்ட நாடு
1. ரஷ்யா 2. ஜேர்மனி 3. ஆஸ்திரியா 4. பிரான்ஸ்

09. 1ஆம் உலகமகாயுத்த கால முடிவில் உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தை தோற்றுவிக்க முன்னின்ற தலைவர்
1. தியோடர் ரூஸ்வெல்ட் 2. பிராங்ளின் ரூஸ்வெல்ட்
3. ஜோசப் ஸ்டாலின் 4. வூட்டோ வில்சன்

10. இரண்டாம் உலகமகா யுத்தத்தில் "அச்சு நாடுகளின்" கூட்டணி
1. [illegible], யப்பான், ஜேர்மனி 2. பிரான்ஸ் யப்பான், ஜேர்மனி
3. சிரியா, இத்தாலி, ஜேர்மனி



**ஆசிரியர் : அகிலன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செங்கோலுடன் ...

இயக்கத்தையும் அரசாங்கத்தையும் கண்டித்து முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அவசர விசேட பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க ஆயத்தமானார். இதற்கு அனுமதி வழங்க அவைத்தலைவர் மறுப்புத் தெரிவித்து அப்பிரேரணையை நிராகரித்தார். இதனைத் தொடர்ந்து சபையில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு ஆதரவாக கோசமிட்டனர். இதனால் சபை நடவடிக்கைகள் முற்பகல் 11.30 வரை ஒத்திவைக்கப்பட்டன. மீண்டும் சபை கூடியபோது குறித்த பிரேரணையை விவாதத்திற்கு ஏற்குமாறு மு.கா. குழுத் தலைவர் ஜெமீல் மற்றும் மு.கா. உறுப்பினர்கள் வற்புறுத்திய போதிலும் அதற்கு அவைத்தலைவர் உடன்படவில்லை. இதனால் சபையில் மீண்டும் அமளி துமளி, கூச்சல் குழப்பம் ஏற்பட்டதனால் சபையை மீண்டும் 15 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் சபை மூன்றாவது தடவையாக கூடியபோதும் குறித்த பிரேரணையை சபையில் சமர்ப்பிதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று மு.கா. குழுத் தலைவர் ஜெமீல் மற்றும் மு.கா. உறுப்பினர்கள் விடாப்பிடியாக நின்று கோ'மிட்டனர். எனினும் அவைத்தலைவர் அதற்கு இடமளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து மு.கா. உறுப்பினர்கள் செங்கோலை தூக்கிக் கொண்டு சபைக்கு வெளியே ஓடினர். இதனால் அவைத்தலைவர் சபையை கால வரையறையின்றி ஒத்தி வைத்தார்.

## அல்பதா பாடசாலையில்...

தமிழ் ஆசிரியர்களை இலக்கு வைத்தா இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்ன அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களிடையே கேள்வி எழுந்துள்ளது.

முன்னைய நடவடிக்கையில் ஈடுபட்ட மாணவன் மனநோய்க்குள்ளானவர் என தெரிவிக்கப்பட்ட போதும் அதனை உறுதிப்படுத்தும் வைத்திய நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் அம் மாணவன் தற்போதும் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார் எனத் தெரிகின்றது. அதே போலவே தற்போதைய மாணவர்களின் செயற்பாட்டிற்கும் நடவடிக்கையினை எடுக்க பாடசாலை நிர்வாகம் சற்றுப் பின்நின்றதாகவும் அதையடுத்து எழுந்த ஆசிரியர்களின் எதிர்ப்பை அடுத்தே தற்போது அந்த மூன்று மாணவர்களுக்கும் சீட்டு கிழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

## அவசரப்பட்டதால் பிரேரணை...

எது எவ்வாறாயினும் எமது சமூகத்தின் பிரச்சனையினை முன்னிறுத்தி அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு பதிலாக இந்த சபையை ஒத்திவைக்க காரணமாக இருந்தவர்கள் தங்களுடைய உணர்வுகளை வெறுமனே ஓர் சபைக் கூட்டத்தை ஒத்திவைப்பதற்கு உதவியதே தவிர, இந்த சமூகத்தின் பிரச்சினை தொடர்பாகப் பேசப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் கிடைக்கின்ற இவ்வாறான அரிய சந்தர்பங்களை கை நழுவ விட்டு விட்டு பின் கைசேதப்படுகின்ற ஓர் அரசியல் சமூகமாக இந்த சமூகம் இருப்பதை எண்ணி வெட்கப்படுகின்றேன் என சிப்லி பாறூக் தெரிவித்தாகவும் தெரிகின்றது.

## கிழக்கின் கல்வி அமைச்சில்...

கிழக்கு மாகாணத்தின் கல்வி அமைச்சின் உயர் பதவிக்கான, வெற்றிடங்கள் இனவிகிதாசாரம் பாதிக்கப்படாத வகையில் கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களைக் கொண்டு நிரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் 2006ம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் படி, இணைந்து செயற்பட்ட வடக்கு கிழக்கு மாகாணம், இரு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. அதன் பிறகு 2008ம் ஆண்டு கிழக்கு மாகாணத்திற்கான தேர்தல் நடைபெற்றுக் கிழக்குமாகாணசபை உருவாக்கப்பட்டது. யுத்த காலங்களில் படுமோசமாக பாதிக்கப்பட்ட மாகாணமாக கிழக்குமாகாணம் காணப்படுகிறது. கல்வித் துறையைப் பெறுத்தவரையில், இத்துறையே படுமோசமாகப் பாதிக்கப்பட்ட துறையாக விளங்குகின்றது. அண்மைக்கால ஆய்வுகளின்படி கிழக்குமாகாணம் கல்வி நிலையில் 9ஆவது இடத்தை பிடித்துள்ளமை இதற்குச் சிறந்த சான்றாகும். இதற்கான முழுப் பொறுப்பும் கிழக்குமாகாணக் கல்வியமைச்சையே சார்ந்ததாகும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு இருந்த காலத்தில் பேணப்பட்டு வந்த இனவிகிதாசாரம் இன்று கிழக்கு மாகாணத்தின் கல்வியமைச்சில் பேணப்படவில்லை.

கிழக்கு மாகாணத்தின் கல்வியமைச்சர் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்தவர். அமைச்சின் செயலாளரும் பெரும்பான்மைச் சமூகத்தையே சேர்ந்தவர். உதவிச் செயலாளர்களாகப் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரும், மற்றயவர் முஸ்லீம் சமுகத்தைச் சார்ந்தவரும் ஆவர். பிரதிக் கல்விப் பணிப்பாளராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த, சேவை நீடிப்பு பெற்ற ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் மாகாணக் கல்வித் திணைக்களத்தை எடுத்தக் கொண்டால், மாகமணக் கல்விப் பணிப்பாளர் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே கிழக்குமாகாணக் கல்வியமைச்சைப் பொறுத்தவரையில் தழிழர்களுக்கு வழங்கப்பட வேணடிய வாய்ப்பக்கள் ஏனைய சமுகத்தினருக்கு வழங்கப்பட்டதோடு இன விகிதாசாரம் பின்பற்றப்படாமை தெளிவாகின்றது.

கிழக்கு மாகாணத்தின் கல்வி நிலை மாறவேணடுமானால், கிழக்கு மாகாணக் கல்வி மட்டம் உயர வேண்டுமானால் கிழக்குமாகாணக் கல்வியமைச்சைப் பொறுத்தவரையில் இனவிகிதாசாரம் பேணப்படவேண்டியது காலத்தின் தேவையாக அமைகின்றது. கிழக்குமாகாணக் கல்வியமைச்சில் ஏற்படும் மாற்றம் நிச்சயமாகக் கிழக்குமாகாணக் கல்வி மட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது வெளிப்படை உண்மையே. வாய்ப்புக்கள் தட்டிப்பறிக்கப்படுவது கூட உரிமை மீறல்தான் என அவ்வூடக அறிக்கை தொடர்கின்றது.

## தவிசாளர் பதவி பறி.....

இதையடுத்து ஏற்பட்ட அமளிதுமளிகளால் சபை நடவடிக்கைகள் கடந்த 17ம் திகதி மூன்றுமுறை ஒத்திவைக்கப்பட்டு பின்னர் எதிர்வரும் ஜூலை மாதம் 18ம் திகதியிலேயே மாகாணசபை கூடும் என தவிசாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசிற்கு எதிரான நியாயமான விடயங்கள் தொடர்பாக முன்னரும் இருமறை தமிழத் தேசியக் கூட்டமைப்பு பேச முற்பட்ட போது சபையினை ஒத்திவைத்து அந்த விடயங்களை பேசமுடியாதபடி தவிசாளர் செய்திருந்தார். அவ்வாறான சந்தாப்பங்களில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள் சபைக்கட்டடத்திற்கு வெளியே ஆர்ப்பாட்ட அமர்வுகளைச் செய்திருந்தனர். தற்போதும் அவ்வாறு தவிசாளர் செய்திருப்பதால் அவரது நடவடிக்கைகளைக் கண்டிப்பதுடன் அதற்கெதிராக அவரைப் பதவிவலக்கும் முயற்சி முனைப்படைந்துள்ளது.

## கட்சித் தலைவர்கள்...

காத்ததாக செய்திகள் கசிந்துள்ளன.

குறித்த பிரேரணையை விவாதிப்பது தொடர்பாக தவிசாளருக்கு எதுவித அழுத்தத்தையும் சி.எம் வழங்கவில்லை என்றும் அச் செய்தி தெரிவிக்கின்றது.

## உத்தியோகபூர்வ ...

குழம்பிய போது அச்சந்தர்ப்பத்தில் தவிசாளரை மாற்ற வேண்டும் என்ற உணர்சிவயப்பட்ட பேச்சு மட்டுமெ நடந்நததாகவும் அதன்பின்னர் அதனை ஆக்க பூர்வமா க முன்னெடுக்கும் முயற்சிகள் எவற்றையும் மு.கா தற்போதுவரை செய்ததாகத் தனக்குத் தெரியவரவில்லைஎன்றும் அவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

அவ்வாறு உத்தியோகபூர்வ அழைப்புக் கிடைக்குமாயின் அதற்குச் சாதகமான பதிலை தமிழத் தேசிய்க் கூட்டமைப்பு வழங்குமா? என்று வினவியபோது அவ்வாறு உத்தியோகபூர்வ அழைப்புக் கிடைத்தால் அனைத்து அங்கத்தவர்களின் ஆலோசனையுடனேயே அதற்கொரு தீர்மானம் மேற்கொள்ளப்படும்என்ன அவர் தெரிவித்தார். ஆனாலும் இதற்கு முன்னர் கிழக்கின் தமிழர்கள் அரச நியமனங்கள் சார்பாக எதிர்நோக்கிய பிரச்சனைகளை சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொண்ண முடியாது எனதவிசாளர் தடுத்து நிறுத்திய போது தமிழத் தேசியக் கூட்டமைப்பு தனித்து நனின்நே அதற்கு எதிராகப் போராடியதை அவர் நினைவு கூர்ந்தார்.

## இனிய பாரதியின் கன்னிப்பேச்சு

அவர்களுக்கு மாகாண சபையில் கன்னிப் பேச்சை நிகழ்த்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மாகாணசபை ஆரம்பமாகி முதல் ஐந்து நிமிடமே அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் மாகாண சபையின் அமர்வு ஆரம்பமாகிவுடன் தனது கன்னிப் பேச்சை நிகழ்த்த எழுந்த இனியபாரதியுடன் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்க மாகாண சபைத் தலைவர் ஜெமீல் அவர்களும் எழும்பியதுடன் பேருவளைச் சம்பவம் தொடர்பாக விசேட பிரேரணைப் பேச்சையே முதலில் நிகழ்த்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதுடன் மாகாணசபையின் அமர்வுகள் குழப்பமடைந்தன. அதனால் தனது கன்னிப் பேச்சைப் பேச இனியபாரதிக்கு வாய்ப்பு அன்றைய தினம் கிட்டவில்லை எனத் தெரிகின்றது.

## பொதுபலசேனாவை...

இதன்போதே நகரசபை உறுப்பினர் எச்.எம்.எம்.பாக்கீரினால் பல பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.காத்தான்குடி நகரசபை அமர்வின்போது காத்தான்குடி நகரசபை உறுப்பினர் திருமதி சல்மா ஹம்சா கண்டனத்தை வெளிப்படுத்தும் சுலோக அட்டையொன்றை தாங்கி அமர்வில் கலந்துகொண்டார்.

## தாக்குதல் நடாத்தப்படும்..

இரகசியமாகக் கிடைத்த உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தாம் இந்த எச்சரிக்கையை விடுப்பதாக தமிழர் தரப்பு தெரிவித்திருந்தது.

கிழக்கில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை சில தமிழ் வன்முறையாளர்களைக் கொண்டு மேற்கொள்ளுவதற்கும் அதனை இதன் மூலம் தமிழ்- முஸ்லிம் இனக்கலவரம் ஒன்றினை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டு வருவதாகவும் தமிழர் தரப்பு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிடம் தெரிவித்திருந்தது.

இந்தச் சதி நடவடிக்கைக்காக இதனைத் திட்டமிடும் அமைப்பானது சில முஸ்லிம் இளைஞர்களுடன் தமிழ் ஆயுத ஒட்டுக்குழுக்களின் குழு உறுப்பினர்களையும் இணைத்து இச் சதியை நிறைவேற்றத் தயாராயிருப்பதாகவும் தமிழத் தரபபால் மு.காவிற்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது என்ற செய்தியை வெளியிட்டுள்ளது.

எனினும் தமிழத் தரப்பின் இச் செய்தியைப் பெரிதுபடுத்த மு.கா விரும்பவில்லை எனத் தெரிவித்திருக்கும் அச் செய்தியானது கிழக்கிலேயே இத்தாக்குதல் நடைபெறும் என எதிர்வு கூறப்பட்டிருந்தாலும் தெற்கில் இடம்பெற்றுள்ளது என மேலும் தொடர்கின்றது.

## அதிபர் நியமனத்தில் ...

அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்த 7 தகுதியானவர்களில் ஆறு பேர் இப் பரீட்சைக்குச் சமூகமளித்துள்ளனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் முதலாமவர் 62 புள்ளிகளையும் இர்ண்டாமவர் 61 புள்ளிகளையும், ஏனைய நால்வரும் முறையே 53,47,45,38 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவர்களுள் நாலாமிடத்தில் உள்ளவருக்கே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் என்ன என பாதிக்கப்பட்டோரிடம் வினிவியபோது முதலாமிடத்தில் உள்ளவர் செயலாற்றுகைத் தர அதிபராக இருப்பதால் அவருக்கு நியமனம் கொடுக்க முடியாது என்றும், இரண்டாமிடத்திலிருப்பவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர் என்பதால் சைவப் பாடசாலைக்கு நியமிக்க முடியாது என்றும் மூன்றாமிடத்திலிருப்பவர் ஏற்கனவே ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்டவர் என்பதால் அவருக்கும் நியமனம் வழங்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

பொருத்தமற்ற மூவருக்கு ஏன் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது என்பதை அறிய அவர்கள் ஆவலாக இருப்பதாக்வும் சைவப் பாடசாலைக்கு கிறிஸ்தவ மத அதிபர் நியமனஞ் செய்யப்படக் கூடாது எனில் ஏன் நகரில் உள்ள மெதடிஸட் பாடசாலையில் சைவ மத அதிபர் கடமையாற்ற முடிகின்றது என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இவ்வாறு நியமனம் மறுக்கப்பட்ட ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிடச் சென்ற வேளை மாகாணக் கல்விப் பணிப்பாளர் இவ்விடயம் தொடர்பாக எந்ந நடவடிக்கை எடுக்கவுள்ளார் என்பதைத் தெரிந்து கொண்ட பின்னரே அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

## திருமலை வளாகத்திற்கு ...

தகவல் தொழில்நுட்ப நிலையத்திற்கு மற்றோர் ஐந்து மாடிக் கட்டம் ஒன்றும் நூலகத்திற்கு நான்கு மாடிக் கட்டடம் ஒன்றும் கட்ட அங்கீகாரம் வழங்க்பட்டுள்ளது.

இம்மூன்று கட்டடத் தொகுதிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி சுமார் 855 லட்ச ரூபாய்கள் ஆகும்.

## இனவெறியரைச் சட்டத்தின் ...

மிகவும் வேதனைமிக்க செயற்பாடு மாத்திரமின்றி கண்டிக்கத்தக்கதுமாகும்.

பொதுபல சோன அமைப்பு உருவாக்கப்பட்ட 2012ஆம் ஆண்டு முதல் இந்நாட்டில் வாழும் முஸ்லிம்கள் இனவாதத்தின் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

முஸ்லிம்கள் உண்ணும் உணவு அணியும் ஆடை, மார்க்கக் கடமைகள் என பல்வேறு விடயங்களில் எவ்வித காரணங்களுமின்றி மூக்கை நுழைத்து, வீண் பிரச்சினைக்குள் தள்ளும் நாகரியமற்ற, மனித நேயமற்ற நடவடிக்கைகளை இந்ந பொதுபல சேனா போன்ற இனவாத அமைப்புக்கள் மேற்கொண்டு வருகின்றன.

சிறுபான்மை மக்களை நசுக்க முயற்சிக்கு மாற்றுச் சக்திகளின் கைபொம்மைகளாக செயற்படுவதற்காக உருவாக்கப்பட்ட பொது பல சேனா போன்ற இனவாத அமைப்புக்கள் அதன் இலக்கை அடைந்துகொள்வதற்காக மேற்கொண்ட இன வெறியாட்டத்தின் அகோர வெளிப்பாடே அளுத்கமயிலும் தர்ஹா நகரிலும் அததையண்டிய பிரதேசங்களிலும் நடந்தேறியுள்ள அழிப்புகளாகும். இக்கலவத்திற்குத் தூபமிட்டவர்கள் எத்தகையவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அமைச்சர் உதுமாலெப்பை விடுத்துள்ள கண்டண அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எவரேனும் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருந்தால் பின்னால் வரும் நாட்களில் நோற்கவேண்டும். எனினும் (கடுமையான நோய், முதுமை போன்ற காரணங்களினால்) நோன்பு நோற்பதைக் கடினமாகக் காண்பவர்கள் அதற்குப் பரிகாரமாக ஒரு மிஸ்கீனுக்கு (ஏழைக்கு) உணவளிக்க வேண்டும். எனினும் எவரேனும் தர்மமாக அதிகமாகக் கொடுக்கிறாரோ அது அவருக்கு நல்லது. ஆயினும் நீங்கள் நோன்பு நோற்பதே உங்களுக்கு நன்மையாகும்.

ரமளான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் (நன்மை-தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல்குர்ஆன் இறக்கியருளப் பெற்றது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும். எனினும் எவர் நோயாளியாகவோ அல்லது பயணத்தில் இருக்கிறாரோ பின்வரும் நாட்களில் நோற்கவேண்டும். அல்லாஹ் உங்களுக்கு

## நோன்பை நோற்க இயலாதவர்கள்



இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை. குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான். அல்குர்ஆன் 2:184,185)

1) ஹம்ஸா இப்னு அம்ருல் அஸ்லமி என்னும் நபித்தோழர், நான் பிரயாணத்தில் நோன்பு நோற்கலாமா? என நபி (ஸல்) அவர்களிடத்தில் கேட்டார்கள். நீங்கள் விரும்பினால் நோன்பு நோற்றுக்கொள்ளுங்கள், நீங்கள் விரும்பினால் நோன்பை விட்டுவிடுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

2) நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு யுத்தத்திற்குச் சென்றிருந்தோம்.

தொடரும் .. ..




## வெஜ் கொழுக்கட்டை


**தேவையான பொருட்கள்**

கோதுமை மாவு - ஒரு கப், அரிசி மாவு (கொழுக்கட்டை மாவு) - ஒரு மே.கரண்டி, பொடியாக நறுக்கிய பெரிய வெங்காயம் - ஒன்று, பொடியாக நறுக்கிய பீன்ஸ் - 5, கேரட் (துருவியது) - ஒன்று, உருளைக்கிழங்கு (துருவியது) - ஒன்று, கோஸ் துருவல் - ஒரு கப், மிளகாய் தூள் - ஒரு தே.கரண்டி, உப்பு - தேவையான அளவு, நல்லெண்ணெய் - 2 தேக்கரண்டி, எண்ணெய் - 2 தேக்கரண்டி

**செய்முறை**

வெறும் தாச்சியில் கோதுமை மாவை லேசாக வறுத்து எடுத்துக் கொள்ளவும். வறுத்த கோதுமை மாவுடன் அரிசி மாவு மற்றும் உப்புச் சேர்க்கவும். பின்னர் அதனுடன் கொதிக்கும் நீரை சிறிது சிறிதாக ஊற்றி, கொழுக்கட்டை மாவு பதத்திற்கு பிசையவும். நல்லெண்ணெய் சேர்த்து நன்கு பிசைந்து வைக்கவும்.

தாச்சியில் எண்ணெய் விட்டு வெங்காயத்தைச் சேர்த்து வதக்கி, பீன்ஸ், கேரட், கோஸ் மற்றும் உருளைக்கிழங்கு சேர்த்து வதக்கவும். பிறகு மிளகாய் தூள் மற்றும் உப்புச் சேர்த்து நன்கு வதக்கவும். லேசான தண்ணித் தன்மை இருக்கும் அளவிற்கு வதக்கினால் போதும்.



பிசைந்து வைத்துள்ள மாவை எலுமிச்சை பழ அளவு உருண்டையாக எடுத்து, லேசாக எண்ணெய் தொட்டுக் கொண்டு கிண்ணம் போல் செய்து, அதில் ஒரு தேக்கரண்டி அளவு வதக்கிய காய்கறி கலவையை வைத்து, மூடி ஓரத்தை ஒட்டவும். மீதமுள்ள மாவிலும் இதேபோல் தயார் செய்து, அவற்றை இட்லி பானையில் வைத்து 8 - 10 நிமிடங்கள் ஆவியில் வேக வைத்தெடுக்கவும். கோதுமை வெஜ் கொழுக்கட்டை தயார். குழந்தைகளும், சர்க்கரை நோயாளிகளும் சாப்பிடுவதற்கு சிறந்த சத்தான உணவு இது.



## இயற்கை அழகைப் பெற

கோடைகாலம் ஆரம்பித்துவிட்டாலே, வெயில் அதிகம் கொளுத்துவதால், உடலானது நீர்ச்சத்தை இழந்து, சுறுசுறுப்பின்றி இருக்கும். மேலும் சருமம் கோடைகாலத்தில் நினைத்ததை விட அதிகபாதிப்புகளை சந்திக்கும். எந்த வித உயர்தர முறையும் கைகொடுக்காமல் போகலாம்.

**சருமத்தைப் பாதுகாக்க ஈஸி டிப்ஸ்**

- அதிலும் சந்தனப் பொடியை தயிர் அல்லது பாலுடன் சேர்த்து கலந்து, முகத்திற்கு போட்டால் முகம் நன்கு அழகாக ஜொலிப்பதுடன் முகப்பருவும் இல்லாமல் போகும்.
- ஸ்ட்ராபெர்ரி முகத்தில் உள்ள இறந்த செல்களை நீக்க மட்டுமல்லாமல், இளமையிலேயே முதுமை தோற்றம் ஏற்படுவதையும் தடுத்து, சருமத்திற்கு அழகான நிறத்தையும் தரும்.
- தக்காளியை வைத்து முகத்திற்கு மாஸ்க் போட்டால், முதுமைத் தோற்றம் நீங்கி, சுருக்கங்கள் குறைந்து, சரும நிற மாற்றமும் மறையும்.



- நீர்ச்சத்து அதிகம் நிறைந்துள்ள தர்பூசணியினால் முகத்திற்கு அவ்வப்போது மாஸ்க் போட்டால், முகம் பளிச்சென்று இருக்கும்.
- வெள்ளரிக்காயை முகத்தில் தேய்த்து, ஊற வைத்து கழுவினால், சருமம் அழகோடு மின்னும்.
- பாலில் சரும வறட்சியைப் போக்கி, சருமத்தை இறுக்கமடையடச் செய்வதற்கான பொருள் அதிகம் உள்ளது. எனவே தினமும் முகத்தை பாலால் கழுவி வந்தால், முகம் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.
- தயிரில் குளிர்ச்சித் தன்மை அதிகம் உள்ளது. எனவே இதனை சருமத்தில் பயன்படுத்தும் போது, சருமம் குளிர்ச்சியடைவதோடு, பழுப்பு நிற சருமமும் மறைந்து விடுகிறது.
- பால் மற்றும் முட்டையின் வெள்ளைக்கருவுடன், கேரட் துருவலை கலந்து முகத்தில் தடவினால், அதிகமாக எண்ணெய் வழிவது குறையும்.
- தினமும் காலையில் எழுந்ததும் பழங்கள் சாப்பிடுவது இளமையை அதிகரிக்கும். குறிப்பாக, ஆப்பிள், ஆரஞ்சு, பப்பாளிப் பழங்கள் சாப்பிடுவது நல்லது.

# கொட்டியாபுரத்து சிங்கம்

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

**சம்பூர் சதீஸின்**

கடந்த வார தொடர்ச்சி .. ..

தூதுவனை உபசரித்து வழியனுப்பும் படி கட்டளையிட்டு, அரசவை நிகழ்வுகளை தொடர்ந்து நடத்தி நிறைவு செய்தார்.

அரசவை நிறைவு பெற்றதும் தலைமை மந்திரி, சேனாதிபதி மற்றும் தலைமை ஒற்றன் ஆகியோரை மாத்திரம் அழைத்து மடல் பற்றி ஆலோசனைக் கூட்டம் நடாத்தினார். இடையிடையே அரசவைக்குச் செல்லும் நான் அன்றும் அங்கிருந்தேன். மாமனார் என்னையும் அருகே உட்கார வைத்து ஆலோசனைகளிலீடுபட்டார்.

பின்னர் சேனாதிபதியிடம் மடலைக் கொடுத்து, அதை வாசிக்கும் படி கூறினார். அவரும் அதை வாங்கிப் படிக்கலானார்.

**"மதிப்புக்குரிய கொட்டியாபுரப்பற்று வன்னிமைக்கு.**

**தாங்கள் கண்டியரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு மாறாக. பறங்கியருடன் சேர்ந்து கண்டியரசுக்கு எதிராக நடைபெறும் சூழ்ச்சியில் பங்கு கொள்வதாக அறிகின்றோம். இதனால் கண்டி அரசசபைக்கு சமூகமளித்து விளக்கமளிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.**

**- கண்டியரசு –"**

சலித்துக்கொண்ட வன்னியனார் கொட்டியாபுரப்பற்று இராச்சியம் கண்டியரசுடன் நட்புக் கொண்டிருக்கும் இத் தருணத்தில் ஏன் இப்படியொரு அரச கட்டளை? எனது படைவீரர்களால் எனக்குத் தெரியாமல் ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெற்றனவோ? எனக் கூறி ஆதங்கப்பட்டார்.

அதற்குத் தலைமை ஒற்றன் இல்லை அரசே அப்படியொரு அசம்பாவிதங்களும் இடம்பெற்றதாகத் தகவல்



இதுவரை இல்லை. ஆனால் நாங்கள் ஒரு பொறிக்குள் மாட்டிக்கொண்டுள்ளோம் என்று தான் அறிந்தவற்றைக் கூறத் தொடங்கினான். பறங்கியர்கள் இன்று யாழ்ப்பாணம், கோட்டை, திருகோணமலை இராச்சியங்களை தமது வஞ்சக சூழ்ச்சிகளின் மூலம் கைப்பற்றிவிட்டனர். தற்போதைய நிலையில் கண்டி இராச்சியம் ஒன்றே மிகவும் பலம் வாய்ந்த நிலையில் பறங்கியர்க்கெதிராக தன்மானத்தோடு போராடிக் கொண்டிருக்கின்றது. அத்தோடு நமது இராச்சியமும், மட்டக்களப்பு, சம்மாந்துறை, போரதீவு, சிங்காரவத்தை, தம்பலகாமப்பற்று, அடங்காப்பற்று போன்ற வன்னி இராச்சியங்களும் பறங்கியருக்கு எதிரானதாகவே உள்ளது.

ஆனால் பறங்கியர் தமது சூழ்ச்சிகள் மூலம் எம்மவர்களிடையே காணப்படும் குரோதங்களைத் தூண்டிவிட்டு, ஒருவரோ டொருவரை மோதவிட்டு இறுதியில் ஆட்சியையே அபகரித்து விடுவதாகத் தான் கேள்விப் படுகின்றேன். இது தான் நடந்தும் வருகின்றது. ஆனால் கண்டியரசு தனது

மேலாண்மையை ஏற்றுக்கொண்டிருக்கிற நிலையிலுள்ள சிறிய இராசதானிகளை பறங்கியருடன் நட்புப்பாராட்டாத வகையில் மிகவும் அவதானித்துக் கொண்டிருக்கின்றது. அத்தோடு பறங்கியரை இலங்கைத் தீவிலிருந்து முற்றாக வெளியேற்று வதற்காக உலாந்தாக் காரரோடு உறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதன் ஒரு அம்சமாகவே கொட்டியாற்றுப் பகுதியில் கோட்டை கட்ட உலாந்தாக் காரரை அனுமதிக்குமாறு சில நாட்களுக்கு முன் தங்களுக்கு வந்த செய்தி அமைந்துள்ளது.

இவ்விருவருடைய நட்பைப் பொறுக்காத பறங்கியர் உலாந்தாக் காராரோடு சண்டையிட்டு தளபதி பொஸ்கோவனுடைய ஆட்களை படுகொலை செய்ததோடு ஒல்ாந்தரின் கொட்டியாற்றுக் கோட்டையையும் கைப்பற்றினர். கண்டியரசனும் ஆங்காங்கே பறங்கியர்களுடன் சண்டையிட்ட வண்ணமே உள்ளான்.



அண்மையில் கிடைத்த தகவலின் படி பழுகாமத்து வன்னிமையை பறங்கியர் விரட்டியும், ஆசை வார்த்தைகள் பல கூறியும் வன்னிமையுடன் இரகசிய ஒப்பந்த மொன்றையும் செய்தனர். இதை கண்டியரசன் அறிந்திருக்கலாம். தனக்கெதிராக நடைபெறும் சூழ்ச்சிகளில் பறங்கியருடன் சேர்ந்து கொட்டியாபுரப்பற்று வன்னிமையாகிய தாங்களும் இணைந்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டு தங்களை கண்டி அரசவைக்கு சமூகமளிக்குமாறு ஓலை அனுப்பப்பட்டிருக்கலாம் என்றும் இது தனது ஊகம் மட்டுமே என்று கூறினார்.

**... பாகம் 04 தொடரும் ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டி

சசிகுமார்

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகள் விளையாட்டுப் பேர்ட்டியில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவர்களான விஜயநாதன் ஆனந்தபிர்காஷ் 17 வயது முப்பாச்சல், 110 மீற்றர் தடை தாண்டல், நாகரெட்ணம் சதுர்சன் 19 வயது பரிதிவட்டம் வீசுதல் போட்டிகளில் முதல் இடத்தினையும், 21 வயதுக்கு உட்பட்ட போட்டியில் அமிர்தகுலசிங்கம் கோகுலன் குண்டு போடுதல், பரிதிவட்டம் வீசுதல், பஞ்சநாதன் யதுசன் முப்பாச்சல் நிகழ்விலும் இரண்டாம் இடங்களை பெற்றுள்ளனர்.

இப்போட்டியில் திருகோணமலை கல்வி வலயம் 72 புள்ளிகளைப் பெற்று 6ம் இடத்தினை பெற்றது. இதில் எமது கல்லூரி 24 புள்ளிகள் பெற்றுக் கொடுத்தது.

## கிண்ணியா வலயமட்ட விழா







கிண்ணியா வலய மட்ட விளையாட்டு விழா கிண்ணியா மத்திய கல்லூரி மைதானத்தில் புதன்கிழமை (10.06.2014) நடைபெற்றது. 9வது வருடமாக இவ்விளையாட்டு விழா நடத்தப்பட்டு வருகின்றது

இதனைஒழுங்கு செய்த உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர நசீர், சேவைக்கால பயிற்சி ஆசிரியர் ஆலோசகர் அக்மல் ஆகியோர் பாராட்டுக்கு உரியவர்களாகின்றனர்.

கல்வி அமைச்சு ஒவ்வொரு வலயத்திற்கும் சமனான ஒதுக்கீடுகளையே செய்து வருகின்றது. திருகோணமலை வலயத்திலும் இவ்வாறான ஒரு விழா நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சசிகுமார்

## பழைய மாணவர்களுக்கான கிரிக்கட்



மட்டக்களப்பு மத்திய கல்லூரியின் 200 வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு பழைய மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கட் போட்டியில் கில்னர் அணி வெற்றி பெற்றது. மட்டக்களப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மட்டக்களப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களும் சென்றலைட் விளையாட்டுக் கழகமும் இந்த சுற்றுப் போட்டியை நடாத்தியது.
10 ஓவர்களைக் கொண்டதாக நடாத்தப்பட்ட இச்ப் போட்டியின் இறுதிப் போட்டியில் கில்னர் அணியும், ரிம்மர் அணியும் மோதிக் கொண்டன. இறுதியில் கில்மர் அணியினரே கோப்பையைத் தட்டிச் சென்றனர்.

## மல்யுத்த வீரர்கள் -பதக்கம்

தேசிய ரீதியில் விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்பட்ட திறந்த மல்யுத்தப் போட்டியில் மட்டக்களப்பிலிருந்து பங்குபற்றிய மல்யுத்த வீரர்கள் இருவர் பித்தளைப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.



கடந்த 15ம் திகதி அன்று நுவரெலியா உள்ளக அரங்கில் நடைபெற்ற போட்டியில் றொயிஸ்ரன் (84கி.கி) மற்றும் சேன் வல்தசர் (96கி.கி) ஆகிய இருவரும் மூன்றாம் இடத்தைப் பெற்று பித்தளைப் பதக்கங்களைப் பெற்றனர்.

## பல்கலைக்கழகங்களுக்கான மல்யுத்தம்

இலங்கையிலுள்ள 14 பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மல்யுத்த போட்டி நிகழ்வு கிழக்கு பல்கலைக்கழக உடல் வலுவூட்டல் அரங்கில் எதிர்வரும் ஜூலை 19 - 20 நாட்களில் நடைபெறவுள்ளது.



நடைபெறவிருக்கும் மல்யுத்த போட்டி நிகழ்வுகளுக்கான உள்ளக அரங்கு புதிதாக நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு அண்மையில் உயர் கல்வி அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



## ஒளிஒலி வெளியீட்டு நிகழ்வு

கலாதரன்

சல்லி ஸ்ரீமுத்துமாரியம்மன் புகழ்பாடும் குறுந்தகடு வெளியீடு கடந்த 15.06.2014 அன்று ஆலய காரியாலயத்தில் வைத்து வெளியிடப்பட்டது. தற்போது வருடாந்த உற்சவம் நடைபெறும் நிலையில் மிக எளிமையாக இந்நிகழ்வு இடம்பெற்றது. விசேடமாக இவ் இசைக்குறுந்தகடானது ஆலய பரிபாலன சபை தலைவர் திரு.இலங்ரக நாதன் அவர்களால் பிரதம குரு ஈசான சிவாச்சாரியார் திரு.கிருபாகரன் குருக்கள் அவர்களால் வெளியிடப்பட்டது. இக்குருந்தகடானது ஆலய ஒளிஒலி அமைப்பு குழு மற்றும் பரிபாலன சபை மற்றும் பொதுமக்களால் தயாரித்து வெளியிடப்பட்டதாகும்.

## இரண்டாம் நாள் நிகழ்வு

உதயகுமார்



மட்டக்களப்பு மாநகர சபையினால் அனுஸ்டிக்கப்பட்டுவரும் உள்ளூராட்சி வார நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வானது கடந்த (17.06.2014) செவ்வாய்க்கிழமை கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தின் முன்பாக மாநகர ஆணையாளர் மா.உதயகுமார் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட போது "மாநகர சபையுடன் இணைவோம் சேவைகளை அறிந்துகொள்வோம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற மக்களை விழிப்பூட்டும் வகையிலான ஊர் வலத்தில் உத்தியோகத்தர் கள் மாணவர்கள் பொது மக்களென பெருந்திரளானோர் கலந்து கொண்டதனையும் படங்களில் காணலாம்.



## சர்வதேசச் செய்திகள்

### டாக்ஸி டிரைவர் மகள் ராணியானார்

தலைநகர் மாட்ரிட் நகரில் நடந்த பிரமாண்டமான விழாவில் பதவியேற்பு விழா நடந்தது.



ஸ்பெயின் மன்னராக ஜுவான் கார்லஸ் என்பவரது உடல்நிலை மோசமானதை தொடர்ந்து அவர் மன்னர் பதவியில் இருந்து விலக முடிவு செய்தார். இதனால் அவரது மகன் Felipe என்பவருக்கு அவர் மன்னராக முடிசூட்ட முடிவு செய்தார். Letiziaவின் பெற்றோர்கள் மிகவும் சாதாரண நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவர்கள். Letizia அவர்களின் தாயார் ஒரு டாக்சி டிரைவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அவர்களின் மகள் இன்று நாட்டுக்கே ராணியாகி உள்ளார்.

### இவள் சைகோவா?



ஜார்ஜியா நாட்டில் Calhoun என்ற நகரில் 34 வயது Suzanne Hussain, என்ற பெண், ஒரு வீட்டினுள் அத்துமீறி நுழைந்துள்ளார். பின்னர் அந்த வீட்டில் உள்ள தண்ணீர் பைப்புகள் அனைத்தையும் திறந்துவிட்டு வீட்டை வெள்ளக்காடாக்கியுள்ளார். வீட்டின் விலைமதிப்புள்ள பொருட்களை சேதப்படுத்தியதோடு, அந்த வீட்டில் உள்ள ஒரு கப்போர்டில் நிர்வாணமாக நின்றிருந்தாராம்.

### உதவி இயக்குனராகும் ஒபாமா மகள்

உலக அளவில் புகழ்பெற்ற திரைப்படங்களை இயக்கிய இயக்குனர் ஸ்டீபன் ஸ்பீல்பெர்க், அடுத்ததாக அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு தொலைக்காட்சி தொடர் ஒன்று தயாரிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இந்த தொலைக்காட்சி தொடரில் ஸ்பீல்பெர்க்குக்கு உதவி இயக்குனராக பணிபுரிய அமெரிக்க அதிபர் ஒபாமாவின் மூத்த மகள் மாலியா ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்க அதிபர் மாலியாவுக்கு தற்போதுதான் 15 வயதுதான் ஆகின்றது. இருப்பினும் அவர் தன்னுடைய சொந்தக்காலில் நிற்க விரும்புவதாலும், கோடை விடுமுறையை பயனுள்ளதாக கழிக்க விரும்புவதாலும் இந்த பணியை செய்ய இருப்பதாக வெள்ளை மாளிகையில் இருந்து தகவல்கள் வெளிவந்துள்ளன.

### தலிபான்களின் அட்டகாசம்

நடைபெற்ற தேர்தலில் பொதுமக்கள் ஓட்டு போடக்கூடாது என தலிபான் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தனர். அதையும் மீறி பொதுமக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர் அதன் மூலம் 52 சதவீதம் வாக்குபதிவு நடைபெற்றுள்ளது. இதனால் தலிபான் தீவிரவாதிகள் கடும் ஆத்திரம் அடைந்தனர். ஹீராத் மாகாணத்தில் ஒரு கிராமத்தில் ஓட்டு போட்டு 11 வந்து கொண்டிருந்த முதியவர்களின் அந்த கைவிரல்களை வெட்டி துண்டித்தனர்.



### நாய் உண்ணும் தென்சீனர்கள்

தென் சீன நகரான யுலினில் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் எதிர்ப்பை தவிர்க்கும் வகையில் கோடை கால நாய் இறைச்சி உண்ணும் கொண்டாட்டங்கள் முன்கூட்டியே இடம் பெற்றன.



வருடத்தின் நீண்ட நாளை குறிக்கும் மேற்படி கொண்டாட்ட நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமையே இடம்பெற வேண்டியிருந்த போதும் இந்த விழாவையொட்டி இடம்பெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தவிர்க்கும் முகமாக முன்கூட்டியே அந்த விழாவை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரப்பட்டதால் பிரேரணையை நிறைவேற்ற முடியாது போனது


பொறியியலாளர் சிப்லி பாறூக்

கிழக்கு மாகாண சபையில் முஸ்லிகளுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைக்கு எதிரான ஓர் கண்டனப் பிரேரணை நிறைவேற்றுதலின் ஊடாக அரசிற்கு அழுத்தத்தினை கொடுப்பது சம்பந்தமாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் சிப்லி பாறூக்கினால் ஓர் பிரேரணை திட்டமிட்டு முன்வைக்கப் பட்டிருந்ததாகவும் அப் பிரேரணை தொடர்பான விவாதம் 18ம் திகதி நடைபெறவிருந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

எனினும் மாகாண முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அவ்வகைப் பிரேரணையொன்று மாகாண சபை..... அமர்வு தொடங்கியவுடன் பேசப்படவேண்டும் என்ற முயற்சியால் சபை குழம்பி இவ்விரு பிரேரணைகளில் எந்தவொரு பிரேரணையும் பேசப்படாமல் போயிருப்பதாகவும் தெரிகின்றது. சிப்லி பாறூக்கின் பிரேரணை மாகாணசபையின் நிகழ்ச்சி நிரலிலும் உள்வாங்கப்பட்டிருந்த நிலையில்

கடந்த 17ம் திகதி இதே பிரச்சனையை அவசரப் பிரேரணையாக முன் மொழிந்து ஆரம்ப உரையை ஆற்ற வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கேட்டுகொண்டதன் விளைவாகவும்.....

அதனை அவ்வாறு முதன்மைப்படுத்தி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு உள்வாங்க முடியாது என்ற சர்ச்சை எழுந்ததன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் தவிசாளருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டாலும் தொடர்ச்சியாக சபையினை கொண்டு செல்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்ததனாலும் சபை அமர்வு எதிர்வரும் ஜுலை 16 ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.......

## பொதுபலசேனாவைத் தடை செய்க

### காத்தான்குடி நகரசபை



காத்தான்குடி நகரசபையில் கடந்த 19ம் திகதி நடைபெற்ற விசேட அமர்வின்போது, நகரசபை உறுப்பினர் எச்.எம்.எம்.பாக்கீரினால் சபையில் முன்வைத்த பொது பல சேனாவை தடை செய்ய வேண்டும் உள்ளிட்ட பிரேரணைகள் திருத்தங்களுடன் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

காத்தான்குடி நகர சபையின் விசேட அமர்வு இன்று வியாழக்கிழமை காத்தான்குடி நகரசபை மண்டபத்தில், காத்தான்குடி நகரசபை தலைவர் எஸ்.எச்.அஸ்பர் தலைமையில் நடைபெற்றது.......

# கிழக்கின் கல்வி அமைச்சில் இன விகிதாசாரம் பேணப்படவில்லை

## கிழக்கு மாகாண தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் இன விகிதாசாரம் பேணப்படாமல் நிறைவேற்றுத்தர நியமனங்கள் நடைபெற்றுள்ளதாக கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் கடும் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளது.

இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அவ் ஊடக அறிக்கையின் படி: இலங்கையில் பிரிவினை வாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக 1987ம் ஆண்டு இலங்கை அரசும், இந்திய மத்திய அரசும் இணைந்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை முழுதும், மாகாண சபைகள் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதன் அங்கமாகத்தான் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டு ஒரே மாகாண அலகின்கீழ் கொண்டுவரப்பட்டது. இக்காலகட்டத்தின் வடக்கு

## திருச்செந்தூரனின் "ஊழிக்காலப் பறவை"

### நூல் வெளியீடு




திருச்செந்தூரன் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பொன்று இன்று (21) சனிக்கிழமை திருகோணமலையில் புத்தக வடிவில் வெளிவரவுள்ளது.

திருகோணமலை அன்புவழிபுரத்தைச் சேர்ந்த திருச்செந்தூரன் சமூக அக்கறையுடன் எழுதியுள்ள பதினேழு கட்டுரைகள் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் தேசிய பத்திரிகைகளில் காலத்திற்குக் காலம் வெளிவந்தவையாக உள்ளன. இன்று மாலை நான்கு மணிக்கு ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது

திருமலை. சுந்தா அவர்களின் அம்மா பதிப்பகத்தால் வெளியிடப்படும் இப் புத்தகத்தின் தலைமையுரையை 'நீங்களும் எழுதலாம்' ஆசிரியர் தனபாலசிங்கம் நிகழ்த்த மதிப்புரையை மலைமுரசின் ஆசிரியர் மாயன் நிகழ்த்தவுள்ளார். முதற்பிரதியை திருமலை மாவட்ட வரலாற்றாய்வாளர்களில் ஒருவரும் வைத்திய கலாநிதியுமான திரு.த. ஜீவராஜ் பெற்றுக்கொள்ளவுள்ளார்

## இனவெறியரைச் சட்டத்தின் முன் நிறுத்துக

### அமைச்சர் எம்.எஸ் உதுமாலெப்பை



(பஹ்மியூஸப்)

அளுத்கம இனவெறியாட்டத்திற்கு தூபமிட்டவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதன் ஊடாக மாத்திரமே இன சகவாழ்வை ஏற்படுத்த முடியும் என கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள தனது கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்கள் காலம் தொட்டு பல்லாண்டு காலமாக இந்நாட்டில் வாழுகின்ற முஸ்லிம்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே நல்லுறவு நிலவுகிறது. இந்நாட்டில் வாழுகின்ற பெரும்பான்மையான மக்கள் சமாதானத்தையும் சகவாழ்வையுமே விரும்புகின்றனர். 30 வருட காலங்கள் இந்நாட்டில் நிலவிய நிம்மதி இழந்த காலம் மீண்டும் ஏற்படக்கூடாது என்பதே இந்நாட்டை நேசிக்கின்றவர்களின் நேசமாக உள்ளது.

இந்நிலையில், சகவாழ்வுடன் வாழும் சிங்கள முஸ்லிம் இனவுறவை இனவாதத் தீயினால் எரியவைத்து அதில் குளிர்காயும் அயோக்கிய செயற்பாட்டை பொதுபல சேனா போன்ற இனவாத அமைப்புக்கள் புரிந்து கொண்டிருப்பது

## திருமலை வளாகத்திற்கு புதிய கட்டட நிதி ஒதுக்கீடு



(முகமட் பவாஸ்)

திருகோணமலை வளாகத்திற்கு புதிய கட்டடங்களை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தீர்மானத்தை 19.06. 2104ல் கூடிய மத்திய அமைச்சரவை அனுமதித்துள்ளது.

இவ்வனுமதியின் படி பிரயோக விஞ்ஞானக் கற்கைப் பீடத்திற்கு ஐந்து மாடிக் கட்டடம் ஒன்றும்,........

# கங்குவேலி அகத்தியர் தாபன நில விடயம் பௌத்த சாசன அமைச்சிடம் !



வரலாற்றுப் புகழ்மிக்க கங்குவேலி அகத்தியர் தாபனத்தின் நிலவிடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை சனாதிபதி பௌத்த சாசன அமைச்சிடம் கையளித்துள்ளார்.

அகத்தியர் தாபன நிலத்தை தொல் பொருட்துறையின் கீழக் கொண்டு வந்து அதன் தொன்மையை இல்லாதொழிக்கும் முயற்சிகள் நடைபெற்றதைத் தொடர்ந்து அகத்தியர் தாபனத்தின் வரலாற்றுத் தொன்மை மற்றும் அதன் சைவசமய உரிமை ஆகியவற்றை எடுத்தியம்பி மூதூர் இந்துக் குருமார் சங்கம் சனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்ததுடன் அந் நிலத்தை மீட்டுத்தருமாறு வேண்டுகோளையும் விடுத்திருந்தது.

அதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக மேலதிக நடவடிக்கையினை எடுக்கும் வேண்டுகோளைச் சனாதிபதியின் செயலாளர் பௌத்தசாசன அமைச்சிடம் பாரப்படுத்தியுள்ளதைக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த 5ம் திகதியிடப்பட்ட இக் கடிதம் தற்போதுவரை பௌத்த சாசன அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்றோர் தகவலும் கிடைத்துள்ளது. அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்ட பின்னரே நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என அமைச்சின் தகவல் கிடைத்துள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org